# மூன்றாம் பருவம்

**இயல் 1** **1. திருக்குறள்** **செய்யுட்பகுதி**

## பண்புடைமை

### மனப்பாடப்பகுதி

1. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
   பண்புடைமை என்னும் வழக்கு.
2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
   பண்புடைமை என்னும் வழக்கு.
3. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
   பண்புள பாடறிவார் மாட்டு.
4. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
   மண்புக்கு மாய்வது மன்.
5. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
   மக்கட்பண்(பு) இல்லா தவர்.

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக :-**

| | | |
|---|---|---|
| | | விடைகள் |
| 1. மாய்வது | - ------------ | 1. அழிவது |
| 2. நயமில | - ------------- | 2. தீங்கு |
| 3. மண்புக்கு | - ------------- | 3. மண்ணிற்குள் புதைந்து |
| 4. ஞாலம் | - ------------ | 4. உலகம் |
| 5. அரம் | - ------------ | 5. வாளைக் கூர்மையாக்கும் கருவி |
| 6. கலம் | - ------------- | 6. பாத்திரம் |

**2. பிரித்து எழுதுக :-**

| | | |
|---|---|---|
| 1. எளிதென்ப | - ------------ | 1. எளிது + என்ப |
| 2. பண்புடைமை | - ------------- | 2. பண்பு + உடைமை |
| 3. மக்களொப்பு | - ------------ | 3. மக்கள் + ஒப்பு |
| 4. பயனுடையார் | - ------------ | 4. பயன் + உடையார் |
| 5. பண்புடையார் | - ------------ | 5. பண்பு + உடையார் |

**3. சேர்த்து எழுதுக :-**

| | | |
|---|---|---|
| 1. அன்பு + உடைமை | - ------------ | 1. அன்புடைமை |
| 2. மக்கள் + பண்பு | - ------------ | 2. மக்கட்பண்பு |
| 3. திரிந்து + அற்று | - ------------ | 3. திரிந்தற்று |
| 4. பண்பு + ஒத்தல் | - ------------ | 4. பண்பொத்தல் |
| 5. பண்பு + இலான் | - ----------- | 5. பண்பிலான் |

**4. எதிர்ச்சொல் அறிக :-**

| | | |
|---|---|---|
| 1. எளிது | x ---------- | 1. அரிது |
| 2. பாராட்டு | x --------- | 2. இகழ் |
| 3. பகை | x ---------- | 3. நட்பு |
| 4. பயனுடையார் | x ---------- | 4. பயனிலார் |
| 5. நகை | x --------- | 5. அழுகை |
| 6. பகல் | x ---------- | 6. இரவு |

**5. சீர் பிரித்து எழுதுக :-**

அன்புஉடைமைஆன்றகுடிப்பிறத்தல்இவ்விரண்டும்
பண்புஉடைமைஎன்னும்வழக்கு.

விடை :- **அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

**6. முறைமாறிய அடிகளை முறைப்படுத்தி எழுதுக :-**

பகையுள்ளும் பண்புள பாடறிவார் மாட்டு
நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி.

**விடை :- நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.**

**7. உவமையைப் பொருளுடன் பொருத்தி எழுதுக :-**

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

**உவமை** - மரம்போல்வர்
**உவமேயம்** - மக்கட்பண்பு இல்லாதவர்
**விளக்கம்** - மக்கள் ஆறறிவு பெற்றவர்கள். கூர்மையான அறிவு பெற்றிருந்தாலும், நன்மக்களுக்கு உரிய பண்புகளைப் பெறாதவர்கள் ஆறறிவு படைத்த மனிதராயினும் அவர்கள் உற்றறிதலாகிய ஓரறிவே உடைய மரத்துக்கே ஒப்பாவர் என்பதாம்.

## ஆ) குறுவினாக்கள்

**1. உலகம் நிலைப்பெற்றிருக்கக் காரணம் யாது?**

நற்பண்பு உடையவர்களாலே இவ்வுலகம் நிலைப்பெற்றிருக்கிறது.

**2. மரம்போல்வர் - யார்? ஏன்?**

1. கூரிய அறிவுடையவராயினும் மக்கட்பண்பு இல்லாதவர் ஓரறிவுடைய மரம் போல்வர் என்றார்.
2. நன்மக்களுக்கு உரிய பண்புகளைப் பெறாதவர்கள் ஆறறிவு படைத்த மனிதராயினும், ஓரறிவுடைய மரத்திற்கு ஒப்பானவர்கள்.

**3. பகலும் இருளாகத் தோன்றும் - யாருக்கு?**

1. பிறரோடு கலந்து பேசி மகிழத் தெரியாதவர்க்கு உலகியல் தெரியாது.
2. ஆதலால், அவர்களுக்குப் பகலும் இருளாகவே இருக்கும்.

**4. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எத்தகையது?**

1. பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிந்து கெடும்.
2. அதுபோல, பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எவர்க்கும் பயன்படாமல் கெட்டழியும்.

## இ) சிறுவினாக்கள்

**1. உயர்ந்த பண்பாளரின் இயல்புகள் யாவை ?**

**உயர்ந்த பண்பாளரின் இயல்புகள் :-**

1. பண்புடையார் நேர்மையையும், அறத்தையும் விரும்பி ஒழுகுவர். அதன்மூலம் தனக்கும் பிறர்க்கும் பயன்பட வாழ்வர். இத்தகைய பண்பாளரையே உலகம் போற்றும்.
2. பண்புடையார் விளையாட்டாய்ப் பிறர் தம்மை இகழ்வது தமக்குத் துன்பம் தருவதை உணர்ந்து, பிறரைப் இகழமாட்டார்.
3. பகைவரிடமும் இனிய பண்புகளுடனே நடந்து கொள்வார்.
4. பண்புடையாரிடம் பொருந்தி நடத்தலாலேயே உலகம் நிலைப்பெற்றிருக்கிறது.
5. இல்லையெனில் இவ்வுலகம் மண்ணோடு மண்ணாகிப் போய்விடும்.

**2. உலகத்தாரால் பாராட்டப்படுபவர் யார் ? ஏன் ?**

**உலகத்தாரால் பாராட்டப்படுபவர் :-** நற்குணங்கள் நிறைந்த பண்புடையாளர்.

**பாராட்டப்படுவதற்கான காரணம் :-**

1. பண்புடையாளர் எளிய தன்மை உடையவர். அன்புடையவராகத் திகழ்பவர்.
2. நீதியையும், அறத்தையும் விரும்பி ஒழுகுபவர். இதன் மூலம் பிறர்க்கும் பயன்பட வாழ்பவர்.
3. தாம் பிறரை விளையாட்டாக இகழ்வது துன்பம் தரும் என்பதை உணர்ந்து இகழமாட்டார்.
4. பகைவர்களிடமும் நற்பண்புகளுடனே நடந்து கொள்வார்.
5. இதுபோன்ற காரணங்களால் பண்புடையாளர் உலகத்தாரால் பாராட்டப்படுகிறார்.

### ஈ) நெடுவினா

1. **பண்புடைமையைப் பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.**

**பண்புடைமையின் கருத்துக்கள் :-**

| | |
|---|---|
| 1. | பண்பாளரின் இயல்பு |
| 2. | பண்பால் ஒத்திருத்தல் |
| 3. | உலகத்தாரால் போற்றப்படுபவர் |
| 4. | பகைவரிடமும் பண்பு பாராட்ட வேண்டும் |
| 5. | உலகம் நிலைப்பெற்றிருக்கிறது |
| 6. | மக்கட்பண்பு இல்லாதவர் மரம் போன்றவர் |
| 7. | பண்பில்லார்க்குப் பகலும் இருளாம் |
| 8. | பண்பில்லாதவன் பெற்ற செல்வம் |

1. **பண்பாளரின் இயல்பு :-**
அன்புடைமையும், உயர்ந்த குடிப்பிறப்பும் ஆகிய இவ்விரண்டும் சிறந்த பண்பாளரின் இயல்புகளாகும்.
2. **பண்பால் ஒத்திருத்தல் :-**
நன்மக்களோடு உடம்பால் ஒத்திருப்பது சிறந்த ஒப்புவமை ஆகாது. உயிரோடு செறியத்தக்க நல்ல பண்புகளால் ஒத்திருப்பதே சிறந்த ஒப்புவமை ஆகும்.
3. **உலகத்தாரால் போற்றப்படுபவர் :-**
நீதியையும், அறத்தையும் பின்பற்றி வாழ்ந்து, அதன் மூலம் தமக்கும், பிறர்க்கும் பயன்பட வாழ்பவரின் பண்பினை உலகம் பாராட்டும்.
4. **பகைவரிடமும் பண்பு பாராட்ட வேண்டும்** :-
பண்புடையார், விளையாட்டாக ஒருவரை இகழ்வது துன்பம் தரும் என்பதை உணர்ந்து பிறரை இகழமாட்டார். பகைவர்களிடமும் இனிய பண்புகளுடனே நடந்துகொள்வார்.
5. **உலகம் நிலைப்பெற்றிருக்கிறது** :-
பண்புடையவர்களாலே உலகம் நிலைபெற்றிருக்கிறது. இல்லையெனில் இவ்வுலகம் மண்ணில் புதைந்து மறைந்து போயிருக்கும்.
6. **மக்கட்பண்பு இல்லாதவர் மரம் போன்றவர் :-**
கூர்மையான அறிவு உடையவராக இருந்தாலும், நல்ல பண்புகள் இல்லாதவராக இருப்பின் அவர் மரத்துக்கே சமமானவர்.
7. **பண்பில்லார்க்குப் பகலும் இருளாம்** :-
பிறரோடு கலந்து பேசி மகிழத் தெரியாதவர்க்கு இவ்வுலகமானது பகற்பொழுதிலும் இருளாகவே இருக்கும்.
8. **பண்பில்லாதவன் பெற்ற செல்வம் :-**
சிறந்த பசுவின் பால், அது வைக்கப்பட்ட பாத்திரத்தின் குற்றத்தால் கெட்டுப்போகும். அதுபோல பண்பில்லாதவர் பெற்ற செல்வம் எவர்க்கும் பயன்படாமல் கெட்டழியும். இங்ஙனம் பண்புடைமையைப் பற்றி வள்ளுவர் எடுத்துக் கூறுகிறார்.

## இயல் 1 — 2. திருவருட்பா — செய்யுட்பகுதி

### மனப்பாடப்பகுதி

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.
**- இராமலிங்க அடிகளார்**

## புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக :-**

1. இரந்தும் - ------------
2. அயர்ந்த - ------------
3. பசியறாது - ------------

**விடைகள்**

1. யாசித்து
2. சோர்ந்த
3. பசி நீங்காது

**2. பிரித்து எழுதுக :-**

1. கண்டபோதெல்லாம் - -----------
2. பசியறாது - ------------
3. வீடுதோறிரந்தும் - -----------
4. கண்டுளம் - ------------

விடைகள்:

1. கண்டபோது + எல்லாம்
2. பசி + அறாது
3. வீடுதோறும் + இரந்தும்
4. கண்டு + உளம்

**3. சேர்த்து எழுதுக :-**

1. நேர் + உற - -----------
2. நெஞ்சு + இளைத்தவர் - -----------

விடைகள்:

1. நேருற
2. நெஞ்சிளைத்தவர்

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக :-**

1. திருவருட்பாவை இயற்றியவர் ------------
2. திருவருட்பாவில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை --------

விடைகள்:

1. இராமலிங்க அடிகளார்
2. 5818

## அ) குறுவினாக்கள்

**1. ‘திருவருட்பா’ குறிப்பு எழுதுக.**

1. திரு + அருள் + பா – திருவருட்பா. இறைவன் திருவருளைப் பெறுவதற்காகப் பாடிய பாடல், இறைவனின் திருவருளால் பாடிய பாடல் என இருவகையாகப் பொருள் கூறலாம்.
2. இ∴து ஆறு திருமுறைகளையும், ஐயாயிரத்து எண்ணூற்றுப் பதினெட்டுப் பாடல்களைக் கொண்டது.

**2. இராமலிங்க அடிகளார் மனம் பதைத்ததற்கான காரணம் யாது ?**

வயிறார உண்ணுவதற்கு வேண்டிய உணவில்லாமல், உடல் மெலிந்து, வீடுதோறும் யாசித்தும் போதிய உணவின்றி, சோர்ந்து இருப்பவரைக் கண்டு இராமலிங்க அடிகளார் மனம் பதைத்தார்.

## ஆ) சிறுவினா

1. **இராமலிங்க அடிகளார் - குறிப்பு எழுதுக.**
   1. இராமலிங்க அடிகளார் சிதம்பரத்துக்கு அருகிலுள்ள மருதூரில் 1823-ல் பிறந்தார்.
   2. இவரின் பெற்றோர் பெயர் இராமையா - சின்னம்மை ஆவர்.
   3. இராமலிங்க அடிகளாரின் சிறப்புப்பெயர் திருவருட்பிரகாச வள்ளலார் என்பதாகும்.
   4. இவர் வடலூரில் சமரசசுத்த சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை,சத்திய தருமச்சாலை ஆகியவற்றை நிறுவினார்.
   5. இவர் இயற்றிய நூல்கள் திருவருட்பா, சீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் ஆகும்.

2. **வள்ளலார் வருந்தக் காரணம் என்ன ?**

**வள்ளலார் வருந்தக் காரணம் :-**

1. நீரின்றி வாடித் துவண்டுக் கிடந்த பயிர்களைக் கண்டபோது வள்ளலாரின் மனம் வாட்டமுற்றது.
2. வயிறார உண்ணுவதற்கு வேண்டிய உணவில்லாமல் வசதியற்றவராய், உடல் மெலிந்து, வீடுதோறும் சென்று யாசித்தும் பசி தீராமல் சோர்ந்து இருந்தனர். அவர்களைக் கண்டு இராமலிங்க அடிகளார் மனம் பதைத்தார்.
3. தீராத கொடிய நோயினால் துன்புற்றவர்களைக் கண்டு வள்ளலார் உள்ளம் துடித்தார்.
4. பிறரிடம் இரப்பதற்கு வெட்கமுற்று உடலும், உள்ளமும் நொந்திருந்த ஏழைமக்களையும் கண்டு வள்ளலார் உள்ளம் மெலிவுற்றது. இக்காரணங்களால் வள்ளலார் வருந்தினார்.

## இயல் 1 | 3. தமிழர் வானியல் | உரைநடைப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக :-**

| | | விடைகள் |
|---|---|---|
| 1. வானியல் | - ----------- | 1. வான் + இயல் |
| 2. தென்திசை | - ----------- | 2. தெற்கு + திசை |
| 3. ஐம்பூதம் | - ------------ | 3. ஐந்து + பூதம் |
| 4. பழந்தமிழர் | - ------------ | 4. பழமை + தமிழர் |
| 5. வானூர்தி | - ----------- | 5. வான் + ஊர்தி |

**2. சேர்த்து எழுதுக:-**

| | | |
|---|---|---|
| 1. காலம் + தோறும் | - ------------ | 1. காலந்தோறும் |
| 2. செம்மை + ஞாயிறு | - ----------- | 2. செஞ்ஞாயிறு |
| 3. மயில் + பொறி | - ------------ | 3. மயிற்பொறி |
| 4. பெருமை + புலமை | - ------------ | 4. பெரும்புலமை |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக :-**

| | |
|---|---|
| 1. தமிழரின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது ---------------- | 1. வானியல் |
| 2. உலகம் ----------- ஆனது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. | 2. ஐம்பூதங்களால் |
| 3. ‘உலகம் உருண்டை வடிவமானது’ எனக் கூறிய முதல் தமிழ்க்குரல் ----- | 3. திருவள்ளுவர் |
| 4. வான்வெளியில் உள்ள மிகப்பெரிய விண்மீன் ------------- | 4. ஞாயிறு |
| 5. தாமே ஒளிவிடக் கூடியவை -------------- எனப்பட்டன. | 5. நாள்மீன் |

### அ) குறுவினாக்கள்

1. **பண்டைத்தமிழர் அறிவியல் அறிவைப் பெற்றிருந்தனர் என்பதைப் புலப்படுத்தும் இலக்கியங்கள் யாவை?**

   தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், திருமந்திரம், திருவாசகம் போன்ற இலக்கியங்கள் ஆகும்.

2. **ஐம்பூதங்கள் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடும் செய்தி யாது?**

   உலகம் ஐம்பூதங்களாகிய **நிலம், நீர், வெப்பம், காற்று, வானம்** ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

3. **உலகம் உருண்டை வடிவமானது எனக்கூறிய மேலைநாட்டவர் யாவர்?**

   போலந்து நாட்டைச் சார்ந்த **நிக்கோலஸ் கிராப்ஸ்** என்பவரும், இத்தாலி நாட்டைச் சார்ந்த **கலீலியோ** என்பவரும் கூறினார்கள்.

4. **‘உலகம் சுழல்கிறது’ என்பதைத் திருக்குறள் வழி விளக்குக.**
   1. உருண்டையான பொருள் தான் சுழலும் என்பது அறிவியல் உண்மை.
   2. எனவே, உலகம் உருண்டையாக இருக்கும் என்பதை ஆராய்வதற்கு எந்தக் கருவியும் இல்லாத காலத்தில் வள்ளுவர் தம் குறளில்,

      **‘சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
      **உழந்தும் உழவே தலை** எனக் கூறியது வியப்புக்குரியதாகும்.

5. **‘திங்களைப் பாம்பு கொண்டற்று’ விளக்குக.**
   1. திங்களைப் பாம்பு கொண்டற்று என்னும் குறள் தொடர் திங்கள் மறைப்பு (சந்திரகிரகணம்) பற்றியதாகும்.
   2. திங்களின் நிலையைக் கருதி தேய்பிறை, வளர்பிறை என்றும் குறித்துள்ளனர்.

## ஆ) சிறுவினாக்கள்

**1. கோள்களின் நிறம், வடிவம் பற்றி விளக்குக.**

1. தமிழர்கள் கோள்களின் நிறம், வடிவம், முதலியவற்றை அறிந்திருந்தனர். செந்நிறமாய் இருந்த கோளைச் **செவ்வாய்** என்றும், ஒளிப்படங்கள் மூலம் செவ்வாயில் செம்மண் இருப்பதாக வெளிப்படுத்தியுள்ளனர்.
2. "வெண்மை நிறமுடைய கோள் **வெள்ளி**" என்றும், வெள்ளியில் வெள்ளித்தாது உள்ளது. ஞாயிறு உதயத்திற்கு முன்பே விடியலை வெள்ளி உணர்த்துவதால் 'விடிவெள்ளி' என்றனர்.
3. 'வியா' என்றால் பெரிய, நிறைந்த எனப் பொருள். வானில் பெரிய கோளாக வலம் வருவதையே **வியாழன்** என்றனர்.
4. புதிதாகக் கண்டறிந்த கோள் **புதன்**. அதற்கு '**அறிவன்**' என்றும் பெயருண்டு.
5. சனிக்கோள் **காரிக்கோள்** என்றும் வழங்குவர். சனியில் கந்தகம் இருப்பதாக ஆய்வு கூறுகிறது.

**2. ஞாயிறு வட்டம் என்பதைப் பழந்தமிழர் எவ்வாறு அறிந்திருந்தனர் ?**

1. வானவெளியில் மிகப்பெரிய விண்மீன், ஞாயிறு. ஞாயிற்றைச் சுற்றிய பாதையை ஞாயிறு வட்டம் என்று பழந்தமிழர் கூறியதாய்ப் புறநானூறு குறிப்பிடுகின்றது.
2. **செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்**
   **பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்.**
3. இப்புறநானூற்று பாடலின் மூலமாக ஞாயிறு வட்டம், அதன் இயக்கம், அந்தரமாய் நிற்கும் வான்வெளி மண்டலம் என்பன பற்றிய வானியல் அறிவை உணரமுடிகின்றது.

**3. வான்வழிப் பயணம் - குறிப்பு எழுதுக.**

1. பழந்தமிழ் இலக்கியங்களில் வான்வழிப் பயணங்கள் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன.
2. 'வலவன் ஏவா வானவூர்தி'- என்ற புறப்பாடல் அடி, சங்ககாலத்திலேயே ஓட்டுநர் இல்லா வானவூர்தி இருந்தது என்ற வியக்கத்தக்க செய்தியைத் தருகிறது.
3. சிலப்பதிகாரம், மணிமேகலையில் வான்வழிப் பயணங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன.
4. சீவகசிந்தாமணியில் மயிற்பொறி, விமானத்தின் செயல்திறனும் இருந்தது.
5. கம்பராமாயணத்தில் இராவணன் செலுத்திய புட்பக விமானமும், பெருங்கதையில் வானூர்தி வடிவமும், அதனை இயக்கும் முறைமையும் காணப்படுகின்றன.

## இ) நெடுவினா

**1. தமிழர் வானியல் அறிவில் சிறந்து விளங்கினர் என்பதை நிறுவுக.**

| |
|---|
| **1. தமிழர் வானியல் அறிவு** |
| **2. ஐம்பூதங்களை உள்ளடக்கிய உலகம்** |
| **3. உலகம் உருண்டை என்ற வள்ளுவரின் கருத்து** |

**1. தமிழர் வானியல் அறிவு :-**

1. தமிழரின் அறிவியல் சிந்தனைகளில் குறிப்பிடத்தக்கது, வானியல் பற்றிய அறிவாகும். ஞாயிறு, திங்கள் என்று ஆராய முற்பட்டபோதே வானியல் ஆய்வு தோன்றிவிட்டது.
2. அறிவியல் கல்விகளில் மிகத் தொன்மையானது வானியல் கல்வி ஆகும்.

**2. ஐம்பூதங்களை உள்ளடக்கிய உலகம் :-**

**நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் ஆதலின் ------ ( தொல்காப்பியம், பொருள்.635 )**

1. உலகம் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், வெப்பம், காற்று, வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.
2. இதுபோன்றதொரு குறிப்பை '**மண்திணிந்த நிலனும்**' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்வழி அறிந்து கொள்ளலாம்.

**3. உலகம் உருண்டை என்ற வள்ளுவரின் கருத்து :-**

1. பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன்பு வரை, உலகம் தட்டையானது என்றனர்.
2. உருண்டையான பொருள்தான் சுழலும் என்பது அறிவியல் உண்மை. உலகம் உருண்டை என்பதை எந்தக் கருவியும் இல்லாத காலத்தில் தம் குறளில் கூறியுள்ளது வியப்புக்குரியது.

   **'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
   **உழந்தும் உழவே தலை'**

3. பதினைந்தாம் நூற்றாண்டில் தான் போலந்து நாட்டைச் சார்ந்த **நிக்கோலஸ்கிராப்ஸ், கலீலியோ** உலகம் உருண்டை எனக் கண்டுப்பிடித்தனர்.
4. இவ்வாறாக தமிழர் வானியல் அறிவில் சிறந்து விளங்கினர் என்பதற்குச் சான்றாகும்.

2. **பண்டைத்தமிழ் இலக்கியங்களில் வானூர்தி பற்றிய குறிப்புகளைப் புலப்படுத்துக.**

| |
|---|
| 1. சங்க காலத்தில் ஓட்டுநர் இல்லா வானவூர்தி |
| 2. புறநானூற்று தமிழன் சிறப்பு |
| 3. தமிழ் இலக்கியங்களில் வானவூர்தி |

1. **சங்ககாலத்தில் ஓட்டுநர் இல்லா வானவூர்தி** :-
   1. பழந்தமிழ் இலக்கியங்களில் வான்வழிப் பயணங்கள் இடம் பெற்றுள்ளன.
   2. **'வலவன் ஏவா வானவூர்தி'** (புறம் 27:8) என்னும் புறப்பாடல் அடி, சங்க காலத்திலேயே ஓட்டுநர் இல்லா வானவூர்தி இருந்தது என்கிற வியக்கத்தக்க செய்தியைத் தருகிறது.
2. **புறநானூற்றில் தமிழனின் சிறப்பு :-**
   1. வானவூர்தி ஓட்டுகிறவனை தமிழில் 'வலவன்' என வழங்கினர்.
   2. இதனால் வானவூர்தியைக் கண்டறிந்த புறநானூற்றுத்தமிழன் நமக்கு முன்னோடியாகத் திகழ்கிறான் எனவும் அறிய முடிகிறது.
3. **தமிழ் இலக்கியங்களில் வானவூர்தி :-**
   1. சிலப்பதிகாரம், மணிமேகலையில் வான்வழிப் பயணங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன.
   2. சீவகசிந்தாமணியில் மயில்பொறி விமானத்தின் செயல்திறன் பற்றியக் குறிப்புகள் உள்ளன.
   3. கம்பராமாயணத்தில் இராவணன் புட்பகவிமானம் பற்றியும், பெருங்கதையில் வானூர்தி வடிவமும், அதனை இயக்கும் முறைமையும் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன.

## இயல் 1 — 4. கலீலியோ கலிலி — துணைப்பாடப்பகுதி

### நெடுவினாக்கள்

1. **கலீலியோவின் அறிவியல் கண்டுபிடிப்புகள் குறித்து எழுதுக.**

| |
|---|
| 1. முன்னுரை |
| 2. நாடித்துடிப்பும், ஊசல்விதியும் |
| 3. அரிஸ்டாட்டில் கருத்து |
| 4. அரிஸ்டாட்டில் கருத்தைத் தவறு என நிரூபித்தார் |
| 5. பணியாற்றிக் கொண்டே ஆய்வு மேற்கொண்டார். |
| 6. விண்வெளி ஆய்வில் பல உண்மைகள் கண்டுப்பிடிப்பு |
| 7. கோபர்நிக்கசு கொள்கையை மெய்ப்பித்தார் |
| 8. முடிவுரை |

1. **முன்னுரை :-**

   **கலீலியோ கலிலி** – என்ற இத்துணைப்பாடத்தில், இளமைக்காலத்திலிருந்தே இயற்கை மீதும் அறிவியல்மீதும், ஆர்வமுடையவராகத் திகழ்ந்த ஒருவர், தன் திறமையினால் அறிவியல் ஆய்வாளராகத் திகழ்ந்தவரின் கண்டுப்பிடிப்புகளைக் காணலாம்.
2. **நாடித்துடிப்பும், ஊசல்விதியும் :-**

   இத்தாலி நாட்டின் பைசா நகரத்தில் மாலைப்பொழுதில் ஒரு கிறித்தவக் கோவிலில் வழிபாடு நடந்துக்கொண்டிருந்தது. எல்லோருடைய பார்வையும் ஆண்டவரை நோக்கி இருந்தது.

   ஒரு சிறுவனின் பார்வை அங்கு ஊசலாடிக் கொண்டிருந்த தொடர் விளக்கின் மீது இருந்தது. அவ்விளக்கு மெதுவாகவோ, வேகமாகவோ ஆடினாலும் ஒருமுறை ஆடுவதற்கான நேரம் ஒன்றாகவே இருப்பதனை தனது நாடித்துடிப்பையே அளவாகக்கொண்டு சரிபார்த்து, சரியானதுதான் என எண்ணி மகிழ்ந்தான். இம்முயற்சியே மருத்துவத்துறையில் நாடித்துடிப்பைக் கணக்கிடும் கருவியைக் கண்டுபிடிக்கத் தூண்டுகோலாய் அமைந்தது.
3. **அரிஸ்டாட்டில் கருத்து :-**

   ஒரே நேரத்தில் உயரத்திலிருந்து எறியப்படும் பொருள்களுள், எடை மிகுந்த பொருள் விரைவாகவும், எடை குறைந்த பொருள் மெதுவாகவும் நிலத்தை வந்தடையும் என்ற அரிஸ்டாட்டில் கருத்தினை கலீலியோ ஒப்புக்கொள்ளவில்லை.
4. **அரிஸ்டாட்டில் கருத்தை தவறு என நிருபித்தார் :-**

   கலீலியோ பைசா கோபுரத்தில் ஏறி, நூறு கிலோ எடையும், ஒரு கிலோ எடையும் கொண்ட இரும்புக்குண்டுகளை ஒரே நேரத்தில் மேலிருந்து கீழே விழச்செய்தார். அவை இரண்டும் ஒரே நேரத்தில் தரையைத் தொட்டன. இதனைக் கண்ட பொதுமக்கள் கலீலியோ கூறியதை ஒப்புக்கொண்டனர்.

5. **பணியாற்றிக்கொண்டே ஆய்வு மேற்கொண்டார் :-**
பதுவா பல்கலைக்கழகத்தில் 1592 ஆம் ஆண்டு கணித விரிவுரையாளராகப் பணியாற்றினார். கணிதமும் வானியலும் பற்றி விரிவுரை ஆற்றினாலும், நிலை இயக்கவியலிலும் பொறியியலிலும் ஆய்வு நிகழ்த்திக் கொண்டிருந்தார். காற்று, வெப்ப அளவியை முதன்முதலாக உருவாக்கினார். இராணுவ வீரர்களுக்கு எளிதாகக் கணக்கிடுவதற்குக் கணிதக் கருவியை வடிவமைத்தார்.

6. **விண்வெளி ஆய்வில் பல உண்மைகள் கண்டுபிடித்தார் :-**
1610 -ஆம் ஆண்டில் தொலைநோக்கியை அமைத்து விண்வெளியை ஆய்வு செய்தார். அதன்மூலம் **'பால்வீதி'** என்பது பலகோடி விண்மீன்களின் தொகுதி என்றும், நிலாவின் மேற்பரப்பு கரடுமுரடானது என்றும், மலைகளும், பள்ளத்தாக்குகளும் நிறைந்ததென்றும் கண்டுபிடித்துக் கூறினார்.

7. **கோபர்நிக்கசுக் கொள்கையை மெய்ப்பித்தார் :-**
அறிஞர் கோபர்நிகசு, அண்டத்தின் மையம் பூமியன்று, சூரியனே : சூரியனைப் பூமியும் பிற கோள்களும் சுற்றி வருகின்றன : சூரியன் நகருவதாய்த் தோன்றுவது பூமியின் சுழற்சியினால் தான் என்று கூறினார். தொலைநோக்கி வழியாக கலீலியோ இக்கருத்தை மெய்ப்பித்தார். வியாழக்கோளைச் சுற்றி நான்கு சிறு கோள்கள் சுற்றி வருவதையும் வெளிப்படுத்தினார்.

8. **முடிவுரை :-**
கலீலியோ கண்டுபிடித்த அறிவியல் உண்மைகளை அவர் காலத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை, என்றாலும் அவர் கண்டுபிடிப்புகள் சரியானவை என்று இன்றைய அறிவியல் துறை ஏற்றுக்கொண்டது.

**இயல் 1** | **4. புணர்ச்சி: இயல்பு, விகாரம்** | **இலக்கணப்பகுதி**

### அ) புறவயவினாக்கள்

**1. பொருத்துக :-**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. இயல்புப் புணர்ச்சி | - | பாடம் | + | வேளை | - | **தமிழ்மண்** |
| 2. தோன்றல் | - | பொன் | + | குடம் | - | **வாழைக்குலை** |
| 3. திரிதல் | - | வாழை | + | குலை | - | **பொற்குடம்** |
| 4. கெடுதல் | - | தமிழ் | + | மண் | - | **பாடவேளை** |

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக :-**
1. நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் சேர்வதற்கு ------ என்று பெயர். **1. புணர்ச்சி**
2. அல் + திணை என்பது ------------ எனப் புணரும். **2. அஃறிணை**
3. தோன்றல், திரிதல், கெடுதல் என்பன ------------ புணர்ச்சி ஆகும். **3. விகாரப்**

**3. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-**
1. வாழை + தோட்டம் என்பது ------------ புணர்ச்சி **1. விகாரப்புணர்ச்சி**
2. நிலைமொழியும்,வருமொழியும் எவ்வித மாற்றமும் இல்லாமல் புணர்வது ---------- **2. இயல்புப்புணர்ச்சி**
3. விகாரப்புணர்ச்சி --------------- வகைப்படும். **3. மூன்று**

**4. விடுபட்ட இடங்களை நிரப்புக.**
1. வாழை+ **பழம்** = வாழைப்பழம் 2. பசுமை + கூழ் = **பைங்கூழ்**
3. வட்டம் + பலகை = **வட்டப்பலகை** 4. பனை + மரம் = **பனைமரம்**

### ஆ) குறுவினாக்கள்

**1. புணர்ச்சி என்றால் என்ன ? சான்றுடன் தருக.**
1. நிலைமொழியின் ஈற்றெழுத்தும், வருமொழியின் முதலெழுத்தும் இணைவதற்குப் புணர்ச்சி என்று பெயர்.
2. **சான்று** :- வாழை + பழம் - வாழைப்பழம். வல்லின மெய் 'ப்' வந்துள்ளது.
3. இவ்வாறு இரண்டு அல்லது பல சொற்கள் இணைவதே **'புணர்ச்சி'** எனப்படும்.

**2. விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்? திரிதல் விகாரம் சான்றுடன் தருக.**
1. விகாரப் புணர்ச்சி மூவகைப்படும். அவை தோன்றல், திரிதல், கெடுதல் என்பவையாகும்.
2. **திரிதல் விகாரம் சான்று** :- பல் + பொடி - பற்பொடி – **(ல்)** - **(ற்)** ஆகத்திரிந்தது.

**3. பாடம் + புத்தகம். இதனைச் சேர்த்தெழுதி, எவ்வகைப் புணர்ச்சி என்பதைக் குறிப்பிடுக.**
1. பாடம் + புத்தகம் - பாடப்புத்தகம்
2. இவை சேரும் போது **'ம்'** – **'ப்'** ஆக திரிந்து பாடப்புத்தகம் எனப் புணர்வதால் இது **'திரிதல் விகாரப் புணர்ச்சி'**. ஆகும்.

## இயல் 1 | 5. வல்லினம் மிகும், மிகா இடங்கள் | மொழித்திறன்பகுதி

**1. தேவையான இடங்களில் வல்லின மெய்யிட்டு எழுதுக.**

1. வெள்ளி கிண்ணம் விலையதிகம்.
   **வெள்ளிக் கிண்ணம் விலையதிகம்.**
2. நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளை காட்டும் கண்ணாடி.
   **நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி.**
3. தைதிங்கள் நன்னாளில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.
   **தைத்திங்கள் நன்னாளில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.**
4. பால்பருக தந்தான்.
   **பால் பருகத் தந்தான்.**
5. உறுதியாக செய்வேன் என்று வாக்கு கொடுத்தான்.
   **உறுதியாகச் செய்வேன் என்று வாக்குக் கொடுத்தான்.**
6. அந்த பையனா இப்படி சொன்னான்?
   **அந்தப் பையனா இப்படிச் சொன்னான்?**
7. இந்த செயலை எப்படி செய்தாய்?
   **இந்தச் செயலை எப்படிச் செய்தாய்?**

**2. வல்லினமெய் சேர்த்தெழுதுக.**

1. தனி + பையன் - **தனிப்பையன்**
2. இனி + பேசு - **இனிப்பேசு**
3. நீர் + குடம் - **நீர்க்குடம்**
4. பாம்பு + தோல் - **பாம்புத்தோல்**

**3. தமிழெண்களின் கூடுதல் காண்க.**

1. **க** + அ - **௯**
2. உ + **கஉ** - **க௪**
3. **க** + **ரு** - **௬**
4. **க** + **க** - உ
5. ௩ + அ - **கக**

**4. கட்டுரை பயிற்சி : உழைப்பே உயர்வு**

| |
|---|
| 1. முன்னுரை |
| 2. உழைப்பு முக்கியத்துவம் |
| 3. உழைப்பின் பயன் |
| 4. உழைப்பின் சிறப்பு |
| 5. நேர்மையான உழைப்பு |
| 6. முடிவுரை |

**1. முன்னுரை:**

ஒருவர் மேன்மையான நிலைக்கு வர துணை நிற்பது உழைப்பே ஆகும். ஒருவன் நிலையான வாழ்க்கை வாழவும், மகிழ்ச்சியான வாழ்க்கை வாழவும் உழைப்பே இன்றியமையாததாகும். உழைப்பினால் வரும் உயர்வினைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**2. உழைப்பு முக்கியத்துவம்:**

“உழைப்பின்றி ஊதியம் இல்லை” என்ற பழமொழிக்கிணங்க நாம் எந்த ஒரு செயலைச் செய்தாலும் ஆர்வத்துடன் பற்றுதலுடன் உழைத்தால் வாழ்வில் முன்னேற்றமடைய முடியும். ஒருவரைப் பலவகையிலும் உயர்த்துவது அவரின் கடுமையான உழைப்பே ஆகும். உழைப்பு என்பது அவரின் குடும்பத்தை உயர்த்துவதோடல்லாமல் நாட்டையும் உயர்த்தும்.

**3. உழைப்பின் பயன்:**

மனதை ஒருநிலைப்படுத்தி உழைப்பதனால் மனம் அமைதி பெறும். உடலும் வலிமை பெறும். கடின உழைப்பே வாழ்வில் வெற்றியைத் தரும். நமக்கான வாய்ப்பை நாம் தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். உழைத்துப் பெறும் வெற்றியே நிலையான வெற்றியாக என்றும் மிளிரும்.

**4. உழைப்பின் சிறப்பு:**

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்" என்ற வள்ளுவரின் கூற்றிற்கிணங்க எந்தச் செயலைச் செய்தாலும் அச்செயலில் முழுமையான ஈடுபாட்டுடனும் முயற்சியுடனும் செய்ய வேண்டும். அப்போதுதான் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும்.

**5. நேர்மையான உழைப்பு:**

நம் உழைப்பு நேர்மையானதாய் இருக்க வேண்டும். பிறர் பாராட்டும் படி உழைக்க வேண்டும். பிறரை ஏமாற்றிப் பெற்ற பொருள் விரைவில் நம்மை விட்டு விலகிச்சென்று விடும். உழைத்து வாழ வேண்டும். பிறர் உழைப்பில் வாழ நினைக்கக்கூடாது.

**6. முடிவுரை:**

கடுமையான உழைப்பே வாழ்வில் நல்ல நிலை சேர்க்கும். வாழ்வில் வெற்றி பெற்று முன்னேறியவர்களின் தாரக மந்திரமாக இருப்பது உழைப்பு மற்றும் முயற்சியே ஆகும். ஆதலால் திறம்பட உழைத்து நம் நாட்டையும் உயர்த்துவோம்!!

**5. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்சொற்களை எழுதுக.**

1. வீக் எண்ட் - வார இறுதி
2. பீச் - கடற்கரை
3. பிராப்ளம் - பிரச்சனை
4. கார் - மகிழுந்து
5. பார்க்கிங் - வாகனங்கள் நிறுத்துமிடம்
6. டாடி – தந்தை
7. ப்ளேஸ் - இடம்
8. திங்க்ஸ் - பொருள்கள்
9. மம்மி – தாய்
10. ப்ளே – விளையாட்டு
11. ஓகே – சரி
12. ஐஸ்கிரீம் - பனிக்கூழ்
13. நோ - இல்லை
14. பீவர் - காய்ச்சல்
15. ஸ்கூல் - பள்ளிக்கூடம்

**வளரறி செயல்பாடுகள்**

**6. உரைப்பத்தியை படித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.**

வ.சுப.மா., எனச் சுருக்கமாக அழைக்கப்படும் வயிரவன்கோவில் சுப்பிரமணியனார் மகனார் மாணிக்கம் என்பார் பல்லாண்டுகளாகத் தமிழுக்கு நிலைத்த தொண்டாற்றியவர். அவர்தம் இளமைக்காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி. வ. சுப. மா., தம் பதினெட்டாம் வயதில் பர்மாவின் (இன்றைய மியான்மர்) தலைநகரமான இரங்கூனில் ஓர் அங்காடியில் வேலை செய்தார். ஒருநாள், அங்காடியின் உரிமையாளர் தம்மைத்தேடி ஒருவர் வருவார் எனவும், அவர் வரும்போது தாம் இல்லை எனக் கூறும்படியும் வ. சுப. மாணிக்கத்துக்குத் கட்டளையிட்டார். ஆனால், அவருக்கு மறுமொழியாக, "அங்காடியின் உரிமையாளர் வெளியில் சென்றிருந்தால் இல்லை என்பேன்; அவர் இருக்கும்போது கேட்டால் எவ்வாறு இல்லை எனச்சொல்வது? நான் அப்படியெல்லாம் பொய் கூறமாட்டேன்' என உரிமையாளரிடம் வ.சுப.மாணிக்கம் உறுதியாகக் கூறினார். இதனால், சினம் கொண்ட உரிமையாளர் அன்றே அவரை வேலையிலிருந்து நீக்கி, இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி விட்டார். இந்நிகழ்வே பிற்காலத்தில் வ.சுப.மா., மாணிக்கத்தைப் 'பொய் சொல்லா மாணிக்கம்' எனப் பெருமையோடு அழைக்க காரணமாக இருந்தது.

**வினாக்கள்:**

1. உரைப்பத்தியில் கூறப்படும் தமிழறிஞர் யார்?
   **வ.சுப.மாணிக்கனார்**
2. வ.சுப.மா., தம்முடைய பதினெட்டாம் வயதில் எங்கு வேலை செய்தார்?
   **இரங்கூனில் ஓர் அங்காடியில் வேலை செய்தார்.**
3. அங்காடி உரிமையாளரிடம் வ.சுப.மா., கூறிய மறுமொழி யாது?
   **நான் பொய் கூற மாட்டேன்**
4. வ.சுப.மா., வின் வாழ்வில் நடந்த நிகழ்வு அவரை எங்ஙனம் பெருமைப்படுத்தியது?
   **பொய் சொல்லா மாணிக்கம்**
5. இவ்வுரைப்பத்தியில் நீ அறிந்து கொள்வது என்ன?
   **பொய் சொல்லக் கூடாது என்பதை நான் அறிந்து கொண்டேன்.**

**7. கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க:**

(அன்பு, அடக்கம், இனிமை, ஈகை, உண்மை, உதவு, எளிமை, கனிவு, துணிவு, தூய்மை, பணிவு, பொறுமை)

அன்பு - அன்பு ஆருயிர் மருந்தாகும்.
அடக்கம் - அடக்கம் வாழ்வின் உயர்வாகும்
இனிமை - இனிமையான சொற்களைச் சொல்.
ஈகை - ஈகையே பேரன்பு
உண்மை - உண்மையே என்றும் காக்கும்
உதவு - உதவுதலே உரிமையாகும்.
எளிமை - எளிமையே ஏற்றம் தரும்.
கனிவு - கனிவே இரக்கம்
துணிவு - துணிவே துணை
தூய்மை - தூய்மையே சுகாதாரம்.
பணிவு - பணிவான சொல்லே பயன் தரும்.

**8. கீழ்க்காணும் பண்புகளை வகைப்படுத்துக.**

**இரக்கம், எளிமை, கடுமை, தன்னலம், அழுக்காறு, ஒப்புரவு, அடக்கம், நடுவுநிலைமை, பொய்பேசாமை, எதிர்த்துப்பேசுதல்**

| **நற்பண்பு** | | **தீய பண்பு** |
|---|---|---|
| இரக்கம் | - | கடுமை |
| எளிமை | - | ஆடம்பரம் |
| தன்னலம் | - | பொதுநலம், பிறர்நலம் |
| அழுக்காறு | - | ஒப்புரவு |
| அடக்கம் | - | எதிர்த்துப் பேசுதல் |
| நடுவுநிலைமை | - | பொய் பேசாமை |

**9. விடுபட்ட கட்டங்களில் காந்தியடிகளின் பிற பண்புகளை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| **சத்தியம்** | எளிமை | **நேர்மை** |
| **அஹிம்சை** |  | பொறுமை |
| **தொண்டு செய்தல்** | | **அறவழி** |
| **உண்மை பேசுதல்** | **பெற்றோரை மதித்தல்** | **இறைப்பற்று** |

**10. கீழ்க்காணும் படம் உணர்த்தும் கருத்துகளை ஐந்து வரிகளில் எழுதுக.**



படத்தில் இருப்பவர் **அன்னைத் தெரசா**. இவர் ஏழை, எளிய குழந்தைகளுக்கும் அன்புகாட்டி அரவணைத்தார். இறுதிவரை எளிமையான வாழ்க்கையே வாழ்ந்தார். இவர் பொறுமை, எளிமை, அன்பு ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாய் விளங்கினார்.

**11. கீழ்க்காணும் சொற்களிலிருந்து புதிய சொற்களை உருவாக்குதல்**

1. மிருதங்கம் - **தங்கம், மிருகம், கருமி, மிதம், கதம்**
2. விழுதுகள் - **விழு, துகள், விழுது, கள்**
3. காவியம் - **காவி, காயம், கா**
4. மருத்துவத்துறை - **மருத்துவம், துறை, மரு, மறை, மத்து, மது, வருத்து**
5. கருத்தரங்கம் - **கரு, தரங்கம், தங்கம், கரகம்**

**12. கீழ்க்காணும் தொடர்களில் மீண்டும் மீண்டும் வரும் சொல்லின் பொருளைக் காண்க.**

1. ஒன்று பட்டால் உண்டு வாழ்வே - **ஒற்றுமை**
2. ஒன்றே குலம் ஒருவனே தேவன் - **இறைவன்**
3. தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் - **செயல்**
4. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே - **தீயவர்**
5. எல்லாரும் ஒன்றெனும் காலம் வந்ததே - **ஒற்றுமை**
6. பாருக்குள்ளே தெய்வம் ஒன்று - **இறைவன்**

**13. கீழ்க்காணும் குறட்பாக்களை உரியவாறு முறைப்படுத்தி எழுதுக.**

| | |
|---|---|
| 1. எண்பதத்தால் எய்தல் யார்மாட்டும் எளிதென்ப பண்புடைமை என்னும் வழக்கு. | **விடை:** எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும் பண்புடைமை என்னும் வழக்கு. |
| 2. அன்புடைமை குடிப்பிறத்தல் ஆன்ற இவ்விரண்டும் வழக்கு என்னும் பண்புடைமை. | **விடை:** அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும் பண்புடைமை என்னும் வழக்கு. |
| 3. நகையுள்ளும் பாடறிவார் மாட்டு பண்புள பகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி. | **விடை:** நகையுள்ளும் இன்னாது திகழ்ச்சி பகையுள்ளும் பண்புள பாடறிவார் மாட்டு. |
| 4. பண்புடையார் உலகம் பட்டுண்டு அதுவின்றேல் மாய்வது மண்புக்கு மன். | **விடை:** பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல் மண்புக்கு மாய்வது மன். |
| 5. அரம்போலும் மக்கட்பண்பு இல்லா தவர் கூர்மையரேனும் மரம்போல்வர். | **விடை:** அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட்பண்பு இல்லா தவர். |

**14. கீழ்க்காணும் சொற்றொடர்களில் வல்லினம் இட்டும் இடாமலும் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மாற்றத்தை எழுதுக.**

1. தந்த பெட்டி - **பிறர் தரும் பெட்டி**
   தந்தப்பெட்டி - **யானைத் தந்தத்தில் செய்த பெட்டி.**
2. மருந்து கடை - **அங்கு மருந்தும் கடையும்** உள்ளது.
   மருந்துக்கடை - **மருந்து விற்கும் கடை**
3. வேலை கொடுத்தான் - **பாலுவுக்கு வேலை கொடுத்தான் சந்திரன்**
   வேலைக்கொடுத்தான் - **முருகனுக்குக் காணிக்கையாக வேலைக் கொடுத்தான்.**
4. தேரைக் கண்டான் - **ஏறிச்செல்லும் தேர்**
   தேரை கண்டான் - **தேரை என்ற உயிரினம்**

**15. கீழ்க்காணும் சொற்றொடர்களை இயல்புப் புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி என வகைப்படுத்துக:**

வாழைப்பூ, வீட்டுச்சிறை, விண்மீன், மேற்பரப்பு, தொலைநோக்கி, சிறுகோள், கண்பார்வை, மாலைப்பொழுது, நீலவானம், மயிற்பொறி, வளர்பிறை, பாடநூல், அருட்பா, கலந்தீமை, மக்கட்பண்பு.

| இயல்புப்புணர்ச்சி | விகாரப்புணர்ச்சி | | |
|---|---|---|---|
| | **தோன்றல்** | **திரிதல்** | **கெடுதல்** |
| விண்மீன்<br>தொலைநோக்கி<br>கண்பார்வை<br>வளர்பிறை | வாழைப்பூ<br>வீட்டுச்சிறை<br>மாலைப்பொழுது | மேற்பரப்பு<br>மயிற்பொறி<br>அருட்பா<br>கலந்தீமை<br>மக்கட்பண்பு | நீலவானம்<br>பாடநூல்<br>சிறுகோள் |

## கற்றலடைவு சிறுமதிப்பீடு

**1. ஓரிரு சொற்களில் விடையளிக்கவும்.** **6x1=6**

அ) அறிவியல் கல்வியில் மிகத் தொன்மையானது எது? **ஊசல் விதி**

ஆ) ஐம்பூதங்களைக் குறிப்பிடுக. **நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ.**

இ) 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' எனக் கூறியவர் யார்? **திருவள்ளுவர்**

ஈ) வானவெளியில் மிகப்பெரிய விண்மீன் எது? **சூரியன்**

உ) ஞாயிற்றின் பல பெயர்களுள் ஐந்தனை எழுதுக.
**சூரியன், கதிரவன், பரிதி, ரவி, பகலோன், திவாகரன், விகத்தன், சுடரோன், ஆதவன், பங்கயன்.**

ஊ) மதி என்னும் சொல்லுக்கு இரு பொருள்தருக.
**1. மதி - அறிவு** **2. மதி - நிலவு**

**2. பொருத்துக.** **4x1=4**

1. கட்டு+ சோறு = கட்டுச்சோறு - இயல்பு விகாரம்
2. கண் + மலர் = கண்மலர் - கெடுதல் விகாரம்
3. வளம்+ நூல் = வளநூல் - திரிதல் விகாரம்
4. முள் + செடி = முட்செடி - தோன்றல் விகாரம்

**விடைகள்:**

1. கட்டு+ சோறு = கட்டுச்சோறு - தோன்றல் விகாரம்
2. கண் +மலர் = கண்மலர் - இயல்பு விகாரம்
3. வளம்+நூல் = வளநூல் - கெடுதல் விகாரம்
4. முள் +செடி = முட்செடி - திரிதல் விகாரம்

## இயல் 2 1. வில்லிபாரதம் செய்யுட்பகுதி

### மனப்பாடப்பகுதி

வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்
தேன்பெற்ற துழாய் அலங்கல் களப மார்பும்
திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன்
ஊன்பெற்ற பகழியினால் அழிந்து வீழ்ந்தும்
உணர்வுடன்நின் திருநாமம் உரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப்பே(று) என்னை அன்றி
இருநிலத்தில் பிறந்தோரில் யார்பெற் றாரே.

- வில்லிபுத்தூரார்

### அ. புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக:-**

| | | விடைகள் |
|---|---|---|
| 1. களபம் | - ------------ | 1. சந்தனம் |
| 2. புயம் | - ------------ | 2. தோள் |
| 3. துழாய் | - ------------ | 3. துளசி |
| 4. பகழி | - ------------ | 4. அம்பு |
| 5. அலங்கல் | - ------------ | 5. மாலை |
| 6. நாமம் | - ------------ | 6. பெயர் |

**2. பிரித்து எழுதுக:-**

| | | |
|---|---|---|
| 1. திருவுளம் | - ----------- | 1. திரு + உளம் |
| 2. திருப்புயம் | - ----------- | 2. திரு + புயம் |
| 3. இருநிலம் | - ----------- | 3. இரு + நிலம் |
| 4. பெருந்தவம் | - ----------- | 4. பெருமை + தவம் |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

| | | |
|---|---|---|
| 1. வில்லிபாரதத்தைப் பாடியவர் | ----------------- | 1. வில்லிபுத்தூரார் |
| 2. வில்லிபுத்தூராரை ஆதரித்தவர் | ------------------ | 2. வரபதி ஆட்கொண்டான் |

### ஆ) குறுவினாக்கள்

**1. வில்லிபுத்தூரார் குறிப்பு வரைக.**

1. வில்லிபுத்தூராரின் தந்தையாரின் பெயர் வீரராகவர்.
2. இவரை வக்கபாகை ஆண்ட வரபதி ஆட்கொண்டான் ஆவார்.
3. இவரின் காலம் பதினான்காம் நூற்றாண்டு ஆகும்.
4. வில்லி பாரதத்தை இயற்றியவர் வில்லிபுத்தூரார் ஆவார்.
5. வில்லிபாரதம் பத்துப் பருவங்களைக் கொண்டது.
6. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல் வில்லிபாரதத்தின் எட்டாம் பருவமாகிய கன்னபருவத்தில் இடம் பெற்றுள்ளது.

**2. தான் பெற்ற பெரும்பேறாகக் கன்னன் கூறியது என்ன?**

1. நான்முகன் தன் கமண்டல நீரால் உன் திருவடிகளை வழிபாடு செய்த போது அது ஆகாய கங்கையாகியது, அத்தகைய திருவடிகளை வணங்கவும் பேறு பெற்றேன்.
2. உன் திருவுள்ளத்தால் ஒரு பொருளாகக் கருதப்பட்டு உயர்வு பெற்றேன்.
3. தேன் கமழும் துளசி மாலையும், சந்தனமும், அணியப் பெற்ற நின் தோள்களையும், மார்பையும் தழுவவும், கூரிய அம்பினால் துளைக்கப்பட்டு வலிமையிழந்து நான் வாடினாலும், உணர்வுடையவனாகி உன் திருப்பெயரை உரைக்கும் பேறு பெற்றேன். இவ்வாறாக கன்னன் தான் பெற்ற பேறாகக் கூறினான்.

## இயல் 2 — 2. யார்கவிஞன்? — செய்யுட்பகுதி

### மனப்பாடப்பகுதி

காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
கைம்மாறு விழைந்துபுகழ் பெறுதல் வேண்டி
மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை
மறைத்துவிட்டுப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
தேசத்தைத் தன்னினத்தைத் தாழ்த்தி விட்டுத்
தேட்டையிடப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
மீசைக்கும் கூழுக்கும் ஆசைப் பட்டு
மேல்விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன்;

ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவ ரேனும்
ஆள்களனத் துஞ்சாமல், தனது நாட்டின்
மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவன்;
மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது
காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளக்
கவிதைகளைப் பாய்ச்சுபவன் கவிஞன் ஆவன்;
தாழ்ச்சிசொலும் அடிமையலன் மக்கட் கெல்லாம்
தலைவனெனப் பாடுபவன் கவிஞன், வீரன்.

- முடியரசன்

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக:-** **விடைகள்**

1. மாசு - ------------ **1. குற்றம்**
2. கைம்மாறு - ------------ **2. பயன்**
3. மாள - ------------ **3. நீங்க**

**2. பிரித்து எழுதுக:-**

1. மாசற - ------------- **1. மாசு + அற**
2. தன்னினம் - ------------- **2. தன் + இனம்**
3. தலைவனென - ------------- **3. தலைவன் + என**

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக:-**

1. கவிஞர் முடியரசனின் இயற்பெயர் ------------ **1. துரைராசு**
2. முடியரசன் பிறந்த ஊர் -------------- **2. பெரியகுளம்**
3. தமிழக அரசின் பரிசுபெற்ற முடியரசனின் காவியம் ------------- **3. பூங்கொடி**

### ஆ) குறு வினாக்கள்

**1. கவிஞனாகும் தகுதி இல்லாதவன் என்று முடியரசன் யாரைக் குறிப்பிடுகின்றார்?**

பணத்துக்கு ஆசைப்படுகிறவன், பயன் கருதிப் பாடுபவன், புகழுக்காக, மனசாட்சியை மறந்து கொள்கையை அடைய நினைப்பவன், தன்நலனுக்காக தேசத்தையும், நாட்டையும் இழிவுபடுத்துகிறவன், மீசைக்கும் கூழுக்கும் ஆசைப்படுபவனாய், தகுதியற்றவரையெல்லாம் போற்றிப் பாடுகிறவன் "**கவிஞன் ஆகும் தகுதி இல்லாதவர்**" என்று கவிஞர் முடியரசன் குறிப்பிடுகிறார்.

**2. உண்மையான கவிஞன் எவ்வாறு இருக்க வேண்டும் என முடியரசன் கருதுகிறார்?**

ஆட்சியாளர்களின் வன்முறைக்கு அஞ்சாமல், யார் வேண்டுமானாலும் நாட்டை ஆளட்டும் என்று இருந்துவிடாமல், தன் நாட்டின் மேன்மைக்காகக் குரல் கொடுப்பவனே கவிஞன் என்றும், கொடுமைகளைக் கண்டு மனங்கொதித்துப் புலியாகி, அக்கொடுமைகள் நீங்குமாறு பாடல்கள் தீட்டுபவனே கவிஞன் என்றும், எதற்காகவும் தலை தாழ்த்தாமல், அடிமையாகாமல் நெஞ்சை உயர்த்தி மக்களின் தலைவனாகத் தன்னை எண்ணிப் பாடுபவனே உண்மையான கவிஞன் என்று முடியரசன் கூறுகின்றார்.

### ஆ) சிறுவினாக்கள்

**1. முடியரசன் -குறிப்பு வரைக.**

1. முடியரசன் தேனி மாவட்டம் பெரியகுளத்தில் 07-10-1920 அன்று பிறந்தார்.
2. இவரின் பெற்றோர் பெயர் சுப்பராயலு - சீதாலெட்சுமி ஆகும்.
3. முடியரசனின் இயற்பெயர் துரைராசு ஆகும்.
4. காரைக்குடியில் உள்ள மீ.சு, உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.
5. இவருக்குப் பறம்பு மலையில் நடைபெற்ற விழாவில் கவியரசு என்னும் பட்டம் குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பட்டது.
6. முடியரசன், பாரதிதாசன் பரம்பரைத் தலைமுறைக் கவிஞருள் மூத்தவர்.
7. இவர் தந்தைபெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர்.
8. இவர் பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள் முதலிய நூல்களை இயற்றினார்.
9. பூங்கொடி என்னும் காவியத்துக்காக 1966ல் தமிழக அரசு பரிசு வழங்கியது.
10. இவர் 03-12-1998 அன்று இயற்கை எய்தினார்.

**2. கவிஞரல்லாதோர் இயல்புகளையும், கவிஞர்க்குரிய இயல்புகளையும் பற்றி முடியரசன் எடுத்துரைப்பன யாவை?**

1. **கவிஞர் அல்லாதோரின் இயல்புகள்:-**
   பணத்துக்கு ஆசைப்படுதலும், பயன் கருதிப் பாடுபவன், புகழ்பெறவேண்டியும், மனசாட்சியை மறந்து கொள்கையை அடைய நினைப்பவன், தன்நலனுக்காக தேசத்தையும், நாட்டையும் இழிவுபடுத்துகிறவன், மீசைக்கும் கூழுக்கும் ஆசைப்படுபவனாய், தகுதியற்றவரையெல்லாம் போற்றிப் பாடுகிறவன் "கவிஞன் ஆகும் தகுதி இல்லாதவர்" என்று கவிஞர் முடியரசன் குறிப்பிடுகிறார்.
2. **கவிஞரின் இயல்புகள்:**
   ஆட்சியாளர்களின் வன்முறைக்கு அஞ்சாமல், யார் வேண்டுமானாலும் நாட்டை ஆளட்டும் என்று இருந்துவிடாமல், தன் நாட்டின் மேன்மைக்காகக் குரல் கொடுப்பவனே கவிஞன் என்றும், கொடுமைகளைக் கண்டு மனங்கொதித்து புலியாகி, அக்கொடுமைகள் நீங்குமாறு பாடல்கள் தீட்டுபவனே கவிஞன் என்றும், எதற்காகவும் தலை தாழ்த்தாமல், அடிமையாகாமல் நெஞ்சை உயர்த்தி மக்களின் தலைவனாகத் தன்னை எண்ணிப் பாடுபவனே உண்மையான கவிஞன் என்று முடியரசன் கூறுகின்றார்.

## இயல் 2 | 3. தேவநேயப் பாவாணர் | உரைநடைப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக:-**

| | | விடைகள் |
|---|---|---|
| 1. அரும்பணி | - --------------- | 1. **அருமை + பணி** |
| 2. தமிழன்னை | - --------------- | 2. **தமிழ் + அன்னை** |
| 3. தனித்தமிழ் | - --------------- | 3. **தனி + தமிழ்** |
| 4. செந்தமிழ்ச் செல்வி | - --------------- | 4. **செம்மை + தமிழ் + செல்வி** |
| 5. நன்றியுணர்வு | - --------------- | 5. **நன்றி + உணர்வு** |

**2. சேர்த்து எழுதுக:-**

| | | |
|---|---|---|
| 1. உறுதி + உரை | - -------------- | 1. **உறுதியுரை** |
| 2. உணவு + இன்றி | - --------------- | 2. **உணவின்றி** |
| 3. சொல் + பொழிவு | - --------------- | 3. **சொற்பொழிவு** |
| 4. சொல் + ஆராய்ச்சி | - -------------- | 4. **சொல்லாராய்ச்சி** |
| 5. உருவம் + சிலை | - ------------- | 5. **உருவச்சிலை** |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

| | |
|---|---|
| 1. தனித்தமிழுக்கு வித்திட்டவர் --------------- | 1. **பரிதிமாற்கலைஞர்** |
| 2. சென்னையில் --------------- பெயரில் நூலகம் அமைந்துள்ளது | 2. **தேவநேயப்பாவாணர்** |
| 3. மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற ஆண்டு ----------- | 3. **05.1.1981** |
| 4. பாவாணர் அரசின் உதவியோடு -------அகர முதலியை வெளியிட்டார். | 4. **சொற்பிறப்பியல்** |

## ஆ) குறுவினாக்கள்

**1. தேவநேயப்பாவாணர் எங்கு எப்போது பிறந்தார்?**

தேவநேயப்பாவாணர் சங்கரன் கோவில் என்னும் ஊரில் 1902ம் ஆண்டு பிப்ரவரி 7ஆம் நாளில் பிறந்தார்.

**2. தமிழ்மொழியின் மீது பற்றுக் கொண்டவர் பாவாணர் என்பதற்கு ஒரு சான்று தருக:-**

1. பால் வாங்கச் சென்ற தேவநேயப்பாவாணர் மீது எதிரே வந்த மிதிவண்டிக்காரர் மோதியதால் பால் சிந்தியது. அதற்கு மிதிவண்டிக்காரர் **"மன்னித்துக்கொள்க"** எனக் கூறினார்.
2. அதற்குப் பாவாணர் **"மன்னிப்பு என்பது உருதுச்சொல்"** பொறுத்துக்கொள்க என்று தமிழில் சொல்லுங்கள் என்று கூறினார். அதன்மூலம் பாவாணரின் தமிழ்ப் பற்று விளங்குகிறது.

**3. பாவாணரின் சொல்லாட்சிச் சிறப்பினை விளக்குக.**

1. ஒரு நாள் வெளியூர் சென்று விட்டுத் திரும்பிய பாவாணரிடம் ஒருவர் "ஐயா பகலுணவும், இராவுணவும் எவ்வாறு இருந்தன? என்று கேட்டார்.
2. பாவாணர் "பகல் உணவு, பகல் உணவாகவும், இராஉணவு இரா உணவாகவும் இருந்தன". என்றார்.
3. பகலில் கிடைத்த சிறிதளவு உணவையே அனைவரும் பகிர்ந்துண்ண நேர்ந்தது என்பதையும், இரவு உணவு இன்றி பொழுதைக் கழிக்க நேர்ந்தது என்பதையும் உணர்த்துகிறது.
4. இதன் மூலம் பாவாணரின் சொல்லாட்சித் திறனை அறியமுடிகிறது.

## இ) சிறுவினாக்கள்

**1. பாவாணரின் படைப்புகளைக் குறிப்பிடுக.**

1. தமிழ் வரலாறு 2. முதல் தாய்மொழி 3. தமிழ்நாட்டு விளையாட்டுகள்
4. தமிழர் திருமணம் 5. வடமொழி வரலாறு 6. தமிழர் மதம்
7. மண்ணிலே விண் 8. பண்டைத்தமிழர் நாகரீகமும், பண்பாடும் 9. உயர்தரக்கட்டுரை இலக்கணம்
10. சொல்லாராய்சிக் கட்டுரைகள் 11. திருக்குறள் மரபுரை முதலான 43 நூல்களைப் படைத்துள்ளார்.

**2. பாவாணர் பெற்ற பட்டங்கள் யாவை?**

பாவாணர் 'பண்டிதர், புலவர், வித்துவான், முதுகலைத்தமிழ், பி.ஓ.எல்' போன்ற பட்டங்களைப் பெற்றார்

## ஈ) நெடுவினாக்கள்

**1. தேவநேயப்பாவாணர் தழிழுக்கு ஆற்றிய தொண்டினை விவரிக்க.**

**பாவாணரின் தமிழ்த் தொண்டு:-**

1. உலக முதன் மொழி தமிழ் என்றும், மற்ற இந்திய மொழிகளுக்கு மூலமும், வேரும் தமிழ்மொழி என்றும், திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி தமிழ் என்றும் தம் வாழ்நாள் முழுவதும் ஆய்வு செய்து நிறுவியவர் செம்மல் தேவநேயப்பாவாணர். தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்டவர்.
2. கோவில்களில் நடைபெறும் வழிபாடும், பிறப்பு, இறப்புத் தொடர்பான அனைத்துச் சடங்குகளும் தமிழில் நடைபெறவேண்டும் என்று வலியுறுத்தினார்.
3. மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் **"மாந்தன் தோற்றமும், தமிழர் மரபும்"** என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றித் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்தார்.

**பாவாணரின் படைப்புகள்:**

1. தமிழ் வரலாறு 2. முதல் தாய்மொழி 3. தமிழ்நாட்டு விளையாட்டுகள் 4. தமிழர் திருமணம் 5. வடமொழி வரலாறு 6. தமிழர் மதம் 7. மண்ணிலே விண் 8. பண்டைத்தமிழர் நாகரீகமும் பண்பாடும் 9. உயர்தரக்கட்டுரை இலக்கணம் 10. சொல்லாராய்சிக் கட்டுரைகள் 11. திருக்குறள் மரபுரை முதலான 43 நூல்களைப் படைத்துள்ளார்.

**2. தேவநேயப்பாவாணரின் பண்பு நலன்கள் குறித்து எழுதுக.**

1. **உண்டவீட்டிற்கு உதவுதல்:-**
   1. ஒருநாள் சொற்றொகுப்புக் காரணமாக நீலமலைக்குச் சென்ற பாவாணர் தன் மீது பெரும்பற்றுக் கொண்ட கிருட்டினையா வீட்டில் தங்கியிருந்தார். அவரைக் கிருட்டினையா காலை உணவுக்குப் பின் உபசரித்து விட்டு காட்டுக்குச் சென்றார்.
   2. அவர் வீடு திரும்பும் நிலையில் வீட்டில் இருந்த விறகுக் கட்டைகளைக் கோடாரியால் பிளந்து கொண்டிருந்தார். அதனைக் கிருட்டினையா தடுத்தார்.
   3. பாவாணர் அதற்கு உண்ட வீட்டிற்கு ஏதாவது செய்ய வேண்டும். உட்கார்ந்து கொண்டு உண்டு செல்வது நல்லதல்ல என்றார்.
2. **தன்மானம் மிக்கவர்:-**

   தாம் பணியாற்றிய கல்வி நிறுவனமொன்றில் தொடர்ந்து பணியாற்ற இயலாத சூழல் ஏற்பட்டபோது "எனக்கு வறுமையும் உண்டு, மனைவிமக்களும் உண்டு, அவற்றோடு மானமும் உண்டு" என்று வெளியேறினார்.
3. **அரிய குணங்கள் வாய்ந்தவர்:-**

   அவர் வறுமையில் வாடினாலும் கையில் கிடைத்த பணத்திற்கும் நூல்களையே வாங்கினார்.

இயல் 2 | 4. மணம் நுகர்ந்ததற்கு பணம் | துணைப்பாடப்பகுதி

## நெடுவினா

1. மணம் நுகர்ந்ததற்குப் பணம் என்னும் கதையைச் சுருக்கி எழுதுக:

1. முன்னுரை
2. பரமார்த்த குருவும், மாணவர்களும்
3. செல்வந்தர் குடும்பத்துக்கான விருந்து
4. கட்டுச்சோறும், வாசனையும்.
5. மணம் நுகர்ந்ததற்குப் பணம்
6. விடுதியாளரின் பேராசை
7. நீதிபதியின் தீர்ப்பு

**1. முன்னுரை:-**

பரமார்த்தகுருவும், அவருடைய மாணவர்களும் வெளியூரில் நடைபெறும் கோவில் திருவிழாவில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்டனர். வழியில் கடுமையான வெயில் நிலவியதால் அங்கிருந்த ஓர் உணவகத்திற்குச் சென்றனர்.

**2. பரமார்த்தகுருவும், மாணவர்களும்,**

குருவும், மாணவர்களும் அந்த உணவகத்திற்குள் சென்றனர். அந்த உணவகம் வழிப்போக்கர் தங்குவதற்குக் கட்டணமின்றி அனுமதியளித்தது. ஆனால் உணவு தேவைப்பட்டால் அதற்குக் கட்டணம் கொடுக்க வேண்டும் என்றார் விடுதியாளர் அதற்கு பரமார்த்தகுரு இல்லை நாங்கள் கட்டுச்சோறு கொண்டுவந்திருக்கிறோம் என்றார். எனவே விடுதியாளர் தங்குவதற்கு அனுமதித்தார்.

**3. செல்வந்தர் குடும்பத்துக்கான விருந்து:-**

செல்வர் குடும்பம் ஒன்று அந்த விடுதிக்கு வந்தது. விடுதியாளர் அவர்களை மிகவும் அன்போடு வரவேற்றார். விடுதியாளரிடம் செல்வந்தர் "எங்கள் குடும்பத்தினருக்கு நல்ல சுவையான உணவு ஏற்பாடு செய்யுங்கள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகின்றோம்" என்றார்.

**4. கட்டுச்சோறும், வாசனையும்:-**

விடுதியாளர் மிகவும் மகிழ்ச்சியுடன் செல்வந்தர் குடும்பத்துக்கான விருந்து சமைத்தார். அறுசுவை உணவின் மணம் பரமார்த்தகுருவின் மூக்கைத் துளைத்தது. இதுவே நல்ல நேரம் என்று எண்ணி குரு மாணவர்களிடம்; "கட்டுச்சோற்று மூட்டையை அவிழ்த்து வாசனையை நுகர்ந்து கொண்டே உண்ணலாம்" என்றார்.

**5. மணம் நுகர்ந்ததற்குப் பணம்:-**

மாணவர்களும் குருவின் யோசனைப்படி கட்டுச்சோற்றை அவிழ்த்து உணவு உண்ணத் தொடங்கினர், அப்போது அங்கு விடுதியாளர் வந்தார், அவரை நோக்கி பரமார்த்தகுரு உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும் நீங்கள் சுவைத்த அறுசுவை உணவின் மணத்தை நுகர்ந்து கொண்டே நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாக உண்கின்றோம் என்றார். உடனே விடுதியாளர் பரமார்த்தகுருவைப் பிடித்துக் கொண்டு நீங்கள் கட்டணம் செலுத்தியாக வேண்டும் என்றார்.

**6. விடுதியாளரின் பேராசை:-**

"நீங்கள் சமைத்த உணவை நாங்கள் உண்ணவில்லை, அந்த மணத்தை மட்டும் தானே நுகர்ந்தோம். அதற்குக் கட்டணம் கேட்கிறீர்களே இது கடவுளுக்கே அடுக்காது" என்றார் பரமார்த்தகுரு. "நான் செய்த சமையலின் மணத்தை நுகர்ந்ததால் தானே மனநிறைவுடன் உண்ணமுடிந்தது" என்று கூறினீர்கள். அதற்குத் தான் பணம் கேட்கிறேன் என்றார். பரமார்த்தகுரு பணம் தர மறுத்ததால் இவ்வழக்கு அவ்வூரில் உள்ள நீதிபதியிடம் சென்றது.

**7. நீதிபதியின் தீர்ப்பு:-**

நீதிபதி வழக்கை விசாரித்து குருவிடம் பணத்தைத் தருமாறு கூறினார். நீதிபதி தீர்ப்பைத் தொடர்ந்து வேலையாளை அழைத்து பணமுடிப்பு ஒன்றைக் கொண்டு வரச் செய்து விடுதியாளரை நோக்கி ஆட்டினார். அந்த முடிப்பை நீங்கள் ஆட்டியபோது எழுந்த ஓசையைக் கொண்டே அறிந்து கொண்டேன் என்றார். நீதிபதி விடுதியாளரை "நீங்கள் ஓசையைக் காது கொடுத்துக் கேட்டீர்களா? " என்றார். ஆம் ஐயா என்றார். உடனே நீதிபதி விடுதியாளரைப் போகலாம் என்றார்.

**8. முடிவுரை:-**

விடுதியாளர் பரமார்த்த குருவிடம் தமக்குச் சேர வேண்டிய பணத்தைப் பெற்றுத் தருமாறு கூறினார். நீதிபதி விடுதியாளரிடம் உணவை உண்ணாமல் மணம் நுகர்ந்தது உணவு உண்டதற்குச் சமம் என்று கூறினீர்கள். அதுபோல பணத்தின் ஓசையைக் கேட்டது பணத்தைப் பெற்றுக் கொண்டதற்குச் சமம் என்று தீர்ப்பளித்தார். இவ்வாறாக விடுதியாளரின் பேராசை ஒழிந்தது. பரமார்த்த குருவின் மனமும் மகிழ்ச்சியடைந்தது.

## இயல் 2 — 5. புணர்ச்சி: உயிரீறு, உடம்படுமெய், மெய்யீறு — இலக்கணப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

1. பொருத்துக:-
   1. இடை + அழகு - மெய்முன்மெய்
   2. மண் + அகல் - உயிர்முன்மெய்
   3. கிளி + மூக்கு - மெய்முன்உயிர்
   4. மரம் + கிளை - உயிர்முன்உயிர்

**விடைகள் :-**

**1. இடை + அழகு - உயிர்முன் உயிர்**
**2. மண் + அகல் - மெய்முன் உயிர்**
**3. கிளி + மூக்கு - உயிர்முன் மெய்**
**4. மரம் + கிளை - மெய்முன் மெய்**

2. உரிய விடைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-
   1. பாடும் + பாடல் - இத்தொடரில் பாடல் என்பது ----------------
      அ) நிலைமொழி **ஆ) வருமொழி** இ) பொது மொழி
   2. பலவாண்டு - இச்சொல் பிரியும் முறை -----------
      அ) பல் + ஆண்டு ஆ) பல + வாண்டு **இ) பல + ஆண்டு**
   3. பனை + ஓலை - இரண்டிற்கும் இடையில் ------------- தோன்றும்.
      அ) வ் **ஆ) ய்** இ) எதுவுமில்லை.

### ஆ) குறுவினாக்கள்

**1. உயிரெழுத்தினை முதலாக உடையச் சொற்கள் நான்கு கூறுக.**
1. அணில் 2. இரும்பு 3. உயிர் 4. ஊர்வலம்

**2. உயிர் ஈற்றுச் சொற்கள் நான்கு கூறுக.**
1. பலா 2. பள்ளி 3. வீடு 4. பிள்ளை

**3. மெய்யீற்றுச் சொற்கள் நான்கு கூறுக.**
1. பழம் 2. பால் 3. வாள் 4. காய்

**4. உடம்படுமெய் என்றால் என்ன?**
1. நிலைமொழி ஈற்றில் உயிரும், வருமொழி முதலில் உயிரும் வந்து புணரும் போது இரு உயிரெழுத்தும் ஒன்று சேராது.
2. இவ்வாறாக இரு உயிர்களையும் ஒன்றுசேர்க்க இடையில் ‘வ்’ அல்லது ‘ய்’ என்ற ஒரு மெய்யெழுத்து தோன்றும். அந்த மெய்யெழுத்தையே ‘உடம்படுமெய்’ என்பர்.
3. **சான்று :**
   1. தே + ஆரம் - தே + **வ்** + ஆரம் - தேவாரம்
   2. அவனே + அரசன் - அவனே + **ய்** + அரசன் - அவனேயரசன்.

### இ) தொடர் பணி

1. **நும் பாடப்பகுதியிலுள்ள ஐந்து உயிரீற்றுச் சொற்களை எடுத்தெழுதுக.**
   மணி, பசு , அழகு, பனை, பிள்ளை என்ற சொற்கள் பாடப்பகுதியிலுள்ள உயிரீற்று சொற்களாகும்.
2. **நும் பாடப்பகுதியிலுள்ள ஐந்து மெய்யீற்றுச் சொற்களை எழுதுக.**
   கண், பொன், மண், மலர், நூல் என்பன பாடப்பகுதியிலுள்ள மெய்யீற்று சொற்களாகும்.

**இயல் 2** **6. வல்லினம் மிகும் மிகா இடங்கள்** **மொழித்திறன்பகுதி**

**1. வல்லினமெய் இட்டும் நீக்கியும் எழுதுக.**

1. சித்திரை திங்களில் வந்து பார்க்கும்படிக் கூறினார்.
   **விடை: சித்திரைத் திங்களில் வந்து பார்க்கும்படி கூறினார்.**
2. வ.உ.சிதம்பரனார்ச் செய்ந்நன்றி மறவா செம்மல் ஆவார்.
   **விடை: வ.உ.சிதம்பரனார் செய்ந்நன்றி மறவாச் செம்மல் ஆவார்.**
3. இராமன் மாயமானை தேடி சென்றான்.
   **விடை: இராமன் மாயமானைத் தேடிச் சென்றான்.**
4. சொற்களைப் பகாபதம், பகுப்பதம் என இருவகைபடுத்துவர்.
   **விடை: சொற்களைப் பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படுத்துவர்.**
5. சிரிக்க தெரியாதவர்களுக்கு பகல் பொழுதும் இருள் ஆகும்.
   **விடை: சிரிக்கத் தெரியாதவர்களுக்குப் பகல் பொழுதும் இருள் ஆகும்.**

**2. அரபு எண்ணுடன் பொருந்தாத தமிழ் எண்ணை வட்டமிடுக.**

1. க – 1 2. உ – 2 **3. கஉ – 17** 4. ரு - 5 **5. உ0 – 10**

**3. கட்டுரை : சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

1. முன்னுரை
2. சுற்றுச்சூழல்
3. இயற்கையை அழித்தல்
4. பல்வேறு விதமான மாசுக்கள்
5. தீமைகள்
6. கட்டுப்படுத்தும் வழிகள்
7. மாணவர் பங்கு
8. முடிவுரை

**1. முன்னுரை:**

“சுற்றும் வரை பூமி, சுடும் வரை நெருப்பு, போராடுபவனே மனிதன்”. உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் இயற்கையோடு இணைந்து வாழ்கின்றன. ஆனால் மனிதன் மட்டும் தன் வசதிக்கேற்ப இயற்கையை மாற்றியமைக்க முற்படுகிறான். இதனால் சூழல் கெடுகிறது. இன்று சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

**2. சுற்றுச்சூழல் :**

நாம் வாழும் பூமியில் நம்மைச்சுற்றி வாழும் உயிர்க்காரணிகளான தாவரங்கள், விலங்குகள், உயிரற்ற காரணிகளான காற்று, வெப்பம், மழை ஆகியவை இணைந்ததே சுற்றுச்சூழல் எனப்படும். மனிதன் இக்காரணிகளைச் சார்ந்தே வாழ்கிறான். மனிதச் செயல்பாடுகளால் இவற்றிற்கு இடையேயான தொடர்புகள் பாதிக்கப்படும் போது சூழல் மாசுபடுகிறது.

**4. இயற்கையை அழித்தல்:**

மனிதன் தன் தேவைகளுக்காகக் காடுகளை அழிக்கிறான். அறிவியல் மற்றும் நவீனமயமாதல், தொழில்பெருக்கம், போக்குவரத்து ஆகியவற்றிற்காக இயற்கை அழிக்கப்படுகிறது. அதனால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது.

**5. பல்வேறு விதமான மாசுக்கள்:**

பாலித்தீன், நெகிழி (பிளாஸ்டிக்) போன்ற மட்காத திடக்கழிவுகளாலும் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளாலும் தொழிற்சாலைக்கழிவுகளாலும் நிலம் மாசுபடுகிறது. குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் போன்றவை நீர்நிலைகளில் கலப்பதால் நீர் மாசடைகிறது. தொழிற்சாலைப் புகையும் வாகனப்புகையும் காற்றில் கலப்பதால் காற்று மாசடைகிறது. வாகன ஒலிப்பான்கள், தொழிற்சாலை இரைச்சல், ஒலிபெருக்கிகள், பட்டாசுகள் வெடித்தல் போன்றவை ஒலிமாசு ஏற்படக் காரணமாகின்றன.

**“சுற்றுச்சூழல் தூயதாக்குவோம் - மக்கள் சுகத்தினை நாளும் பேணுவோம்”**

**4. தீமைகள் :**

நிலம் மாசுபடுவதால் அதில் விளையும் உணவுப்பொருள்கள் நச்சுத்தன்மை உடையனவாய் அமைந்து நம் வாழ்வுக்குக் கேடு செய்கின்றன. எளிதில் மட்காத பாலீத்தீன் பைகள் நிலத்தடி நீர்வளத்தைத் தடுக்கின்றன. நீர் மாசுபடுவதால் மலேரியா, டைபாய்டு, காலரா போன்ற நோய்கள் உண்டாகின்றன. காற்று மாசுபடுவதால் சுவாசக்கோளாறுகளை ஏற்படுத்துகின்றன. ஒலிமாசுபாட்டால் நரம்புமண்டலப் பாதிப்புகள், மனஅழுத்தம், காதுகேளாமை போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

**5. கட்டுப்படுத்தும் வழிகள் (அ) மாசுக்கட்டுப்பாடு**

* பிளாஸ்டிக், பாலித்தீன் பொருட்களைப் பயன்படுத்துவதைக் குறைக்க வேண்டும்.
* மட்காத பொருட்களை மறுசுழற்சி செய்ய வேண்டும்.
* இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும். இதனால் நிலம் மாசடைவதைத் தடுக்கலாம்.
* ஆலைக்கழிவு நீரை மறுசுழற்சி செய்து வெளியேற்ற வேண்டும்.
* வீட்டுக்கழிவு நீரைத் தோட்டங்களுக்குப் பாய்ச்ச வேண்டும். இதனால் நீர் மாசினைத் தடுக்கலாம்.
* மரபுசாரா எரிசக்தியைப் பயன்படுத்த வேண்டும்.
* அதிக அளவில் மரங்களை வளர்க்க வேண்டும். அதனால் காற்று மாசினைத் தடுக்கலாம்.

**6. மாணவர் பங்கு:**

* **“பசுமை எங்கே வளமை அங்கே”** என்பதற்கேற்ப மாணவர்கள் பள்ளிகளில் உள்ள பசுமைப்படை, நாட்டு நலப்பணித்திட்டம், சாரணர் படை முதலியவற்றில் இணைந்து தாங்கள் வாழும் பகுதிகளில் மரக்கன்றுகளை நட்டுப் பராமரிக்க வேண்டும்.
* பாலித்தீன் ஒழிப்பு, சூழல் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வுப் பேரணிகள், கலைநிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்த வேண்டும்.
* தத்தம் வீடுகளிலும், அண்டை வீட்டாரிடமும், சூழல் பாதுகாப்பு பற்றி கலந்துரையாடி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

**7. முடிவுரை:**

மனிதன் இயற்கையோடு இணைந்த வாழ்வை மேற்கொள்ள வேண்டும். இயற்கையைப் போற்றி வாழும் போது இயற்கை அனைத்து உயிர்களையும் வாழவைக்கும். இயற்கைக்கு எதிரான போக்கு தற்கொலை முயற்சிக்கு ஒப்பானதாகும். இயற்கையைப் போற்றுவோம்! சூழலைக் காப்போம்!!

**4. தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்.**

| | |
|---|---|
| ஒருவர் | : இந்தப் **படிவத்தை** கொஞ்சம் **நிரப்பிக்** கொடுங்க. |
| மற்றொருவர் | : என்ன **படிவம்** அது? எதுக்கு **விண்ணப்பம்** பண்றீங்க? ஓ **குடும்ப அட்டைக்கா**? |
| ஒருவர் | : நானே **நிரப்பி** விடுவேன். ஆனால் கொஞ்சம் **விவரங்கள்** புரியவில்லை. |
| மற்றொருவர் | : நான் **உதவி** பண்றேன். கேட்கும் **வினாக்களுக்கு விடை** சொல்லுங்கள். அது போதும். |
| ஒருவர் | : சரி, கேளுங்க. |
| மற்றொருவர் | : உங்கள் **பெயரைச்** சொல்லுங்க. |
| ஒருவர் | : என் பெயர் சீனிவாசன் |
| மற்றொருவர் | : எங்கே **வேலை** பண்றீங்க? |
| ஒருவர் | : **அச்சகத்திலே அலுவலக உதவியாளராய்** இருக்கேன். |
| மற்றொருவர் | : உங்க வீட்டு **முகவரி** சொல்லுங்க. |
| ஒருவர் | : வீட்டு **எண் ஆறு**. அண்ணா **தெரு**, **திருவல்லிக்கேணி**, சென்னை. |
| மற்றொருவர் | : இந்தாங்க. |

**வளரறி செயல்பாடுகள்**

**5. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.**

**வினாக்கள்:**

1. உரைப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழறிஞர் யார்? **சுவாமி வேதாசலம்**
2. சுவாமி வேதாசலம் என்னும் பெயர் எங்ஙனம் மறைமலையடிகள் ஆயிற்று?
   **தன் மகள் நீலாம்பிகையின் வேண்டுகோளுக்கிணங்க வடமொழிப்பெயரான சுவாமி வேதாசலம் என்னும் தன்பெயரை மறைமலையடிகள் என மாற்றிக்கொண்டார்.**
3. “தேகம்” எனவும் “யாக்கை” எனவும் குறிப்பிடப்படும் சொல்லின் பொருள் யாது? **உடல்**
4. திருவருட்பா பாடலை இயற்றியவர் யார்? இராமலிங்க வள்ளலார்
5. உன் நண்பனின் பெயர் வடசொல்லில் அமைந்திருந்தால், அதனை எவ்வாறு தனித்தமிழில் கூறுவாய்?
   **என் நண்பனின் பெயர் ஹரிஷ். அவன் பெயரைத் தனித்தமிழாக்கி திருமால் எனக்கூறுவோம்.**

**6. கீழ்க்காணும் விடைக்குறிப்புகளைக் கொண்டு சரியான சொற்களைக் கண்டறிந்து வட்டமிடுக. வட்டமிட்ட சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தா | ள் | உ | லை | மா | ச |
| யா | கா | ள் | று | ஆ | ந் |
| ன் | த் | ள | த | ம | த |
| ல் | அ | ம் | பு | க | ன |
| டு | ம | பெ | ய | ர் | ம் |
| ஏ | தி | சி | ய் | ழா | து |

பாதம் என்னும் வடசொல்லுக்குரிய தமிழ்ச்சொல் **தாள்**
மனம்,நெஞ்சு, **உள்ளம்** என்றாலும் ஒரே பொருள்.
திருமாலுக்கு அணிவிக்கும் மாலை **துழாய்**
உடலில் **சந்தனம்** பூசினால் மணம் வீசும். குளிர்ச்சி தரும்.
வில், **அம்பு** இவ்விரண்டனையும் தனித்தனியாகப் பயன்படுத்துதல் இயலாது.
நாமம் என்பதன் தமிழ்ச்சொல் **பெயர்**
**மதி**யினால் சதியை வெல்லலாம் என்பர்.
நான் என்னும் சொல்லின் திரிபு **யான்**
நதி என்பதன் தமிழ்ச்சொல் **ஆறு**
அலங்கல் என்பதன் பொருள் **மாலை**

**7. கீழ்க்காணும் வினாக்களுக்கான விடைகளைத் தமிழெண்களில் எழுதி அவற்றைக் கட்டங்களில் நிரப்புக.**

1. ஆய கலைகள் **சாச** என்பர்.
2. ஆலும் வேலும் பல்லுக்குறுதி. **ச** இரண்டும் சொல்லுக்குறுதி.
3. கீழ்க்கணக்கு நூல்கள் **கஅ**
4. தமிழில் **கஉ** மாதங்கள் உள்ளன.
5. சுவை **சா** வகைப்படும்.
6. தமிழிலக்கணம் **ரு** வகைப்படும்.
7. செல்வங்கள் **கசா** என்பர்.
8. பசி வந்திடப் **க0** போகும்.
9. சிற்றிலக்கியங்கள் **கூசா** வகை என்பர்.
10. நீ பயிலும் வகுப்பு **அ**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 **சா** | **ச** | | 2 **ச** | |
| 3 **க** | **அ** | | 4 **க** | **உ** |
| 5 **சா** | | 6 **ரு** | | |
| 7 **க** | **சா** | 8 **க** | **0** | |
| 9 **கூ** | **சா** | | 10 **அ** | |

**8. கீழ்க்காணும் உரைப்பத்தியிலிருந்து உயிரீறு, மெய்யீறு அமைந்த சொற்களை எடுத்தெழுதுக.**

| உயிரீற்றுச் சொற்கள் | மெய்யீற்றுச் சொற்கள் |
|---|---|
| வேற்றுமையுண்**டு** (ட்+உ), என்ப**து** (த்+உ)<br>ஒ**ரு** (ர் +உ), பழைய (ய் +அ), வ**ழி** (ழ் +இ)<br>தமிழ்ச்சொல்லன்**று**(ற் +உ), தமிழ்நாட்டுக்**கு** (க் +உ)<br>வருவதற்**கு**(க் +உ), வீட்டுச்சன்னலுக்**கு** (க் +உ)<br>அன்**றோ** (ற் +ஓ), இல்லா**த**(த் +அ),சொல்**லை** (ல் +ஐ)<br>முதலி**ய** (ய் +அ), ப**ல** (ல் + அ), காற்**று** (ற் +உ)<br>வருவதற்கா**க** (க் +அ), என்**று** (ற் +உ) | தமிழ்நாட்டி**ல்**, ஏட்டுத்தமிழுக்கு**ம்**,<br>வீட்டுத்தமிழுக்கு**ம்**, அத**ர்**, தமிழ்ச்சொ**ல்**<br>பெயரிட்டன**ர்**, பத**ம்**, மு**ன்**, ந**ம்**, பெய**ர்**<br>இருந்திருத்த**ல்**, வேண்டு**ம்**, இக்காலத்தி**ல்**<br>பேச்சு வழக்கி**ல்**, பண்டைத்தமிழ**ன்**, திருக்குற**ள்**<br>அச்சொல்லி**ன்**, பொரு**ள்**, வீட்டி**ல்**, அமைக்கு**ம்**<br>காலத**ர்** |

**9. கோடிட்ட தொடர்களில் கோடிட்ட இடத்தில் உரிய மயங்கொலிச் சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. 'இன்று **பனி** ப்பொழிவு மிகுதியாக உள்ளதால், இரவு **பணி** செய்வது கடினம்' எனக் கண்ணன் கூறினான்.
2. வேல்விழி கோடை விடுமுறையைக் **களி** ப்புடன் **கழி** க்க விரும்பினாள்.
3. **வளி** சுழன்று வீசியதால் **வழி** தவறிய வளவன் கல்லில் மோதிக் கீழே வீழுந்து **வலி**யால் துடித்தான்.
4. யாரோ தன்னை **விளி** க்கும் குரல் கேட்ட முருகன், கண் **விழி** த்துப் பார்த்தான்.
5. **ஏரி** யில் நீர் நிரம்பியதைக் காண விரும்பிய எழிலன் அருகில் இருந்த மரத்தின்மீது **ஏறி** னான்.
6. பரந்துப்பட்ட **பரவை** யின் மீது **பறவை** பறந்து சென்றது.
7. **மாரி** பொய்த்ததனால் மனம் வருந்திய மக்கள் இடம் **மாறி** ச்சென்றனர்.
8. **மலை** யின் ஒரு பகுதியில் மட்டுமே **மழை** பெய்தது.
9. ஆடையில் **கறை** இருப்பதனைக்கண்ட முகிலன், அதனை நீக்குவதற்காக அருகில் இருந்த ஆற்றங்**கரை**க்குச் சென்றான்.
10. வயலில் **விளை** ந்த சோளக்கதிர்களை **விலை** க்கு விற்க வளவன் முடிவெடுத்தான்.

## கற்றலடைவு சிறுமதிப்பீடு

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1=5**

அ) வான் பெற்ற நதி ............ **அ) கங்கை**

ஆ) துழாய் அலங்கல் என்பதன் பொருள் ............. **ஆ) துளசிமாலை**

இ) காசுக்குப் பாடுபவன் ............. அல்லன். **இ) கவிஞன்**

ஈ) தாழ்ச்சி என்பதன் எதிர்ச்சொல் ................. **உ) உயர்ச்சி**

உ) அடிமையலன் - அச்சொல்லைப் பிரிக்கும் முறை ............... **ஊ) அடிமை + அலன்**

**2. ஓரிரு சொற்களில் விடையளிக்கவும்:** **5x1=5**

அ) ‘மன்னிப்பு’ - இச்சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் யாது?

**பொறுத்துக்கொள்க**

ஆ) பகலுணவு, இராவுணவு குறித்துப் பாவாணர் யாது கூறுகின்றார்?

**பாவாணர் பகலுணவு, பகல் உணவாகவும், இராவுணவு இரா உணவாகவும் இருந்தன என்றார்.**

இ) பாவாணர் எழுதிய நூல்களுள் இரண்டனைக் குறிப்பிடுக.

**தமிழ்நாட்டு விளையாட்டுகள், தமிழர் திருமணம்.**

ஈ) தமிழன் தொன்மையை உலகறியச் செய்தவர் யார்?

**தமிழன் தொன்மையை உலகறியச் செய்தவர் கால்டுவெல்.**

உ) தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் யார்?

**தேவநேயப் பாவாணர்**

## இயல் 3 — 1. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் — செய்யுட்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக :-**

| | | விடைகள் |
|---|---|---|
| 1. அமுதம் | - ------------ | 1. குளிர்ச்சி |
| 2. கிரணம் | - ------------ | 2. ஒளி |
| 3. நெகிழ | - ------------ | 3. இளக |
| 4. உதயம் | - ------------- | 4. தோற்றம் |
| 5. மதுரம் | - ------------ | 5. இனிமை |
| 6. சலதி | - ------------ | 6. கடல் |
| 7. புவனம் | - ------------ | 7. உலகு |
| 8. மதலை | - ------------ | 8. குழந்தை |
| 9. பருதி | - ------------ | 9. ஞாயிறு |

**2. பிரித்து எழுதுக :-**

| | | |
|---|---|---|
| 1. அமுதகிரணம் | - ------------ | 1. அமுதம் + கிரணம் |
| 2. பிள்ளைத்தமிழ் | - ----------- | 2. பிள்ளை + தமிழ் |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக :-**

1. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழை இயற்றியவர் --------------- **1. குமரகுருபரர்**
2. இறைவனையோ நல்லாரையோ பாட்டுடைத்தலைவராகக் கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடப்படும் சிற்றிலக்கிய வகை ------------- **2. பிள்ளைத்தமிழ்**
3. பிள்ளைத்தமிழிலுள்ள பருவங்களின் எண்ணிக்கை ----------- **3. பத்து**
4. பிள்ளைத்தமிழ் ------------- வகைப்படும். **4. 96**
5. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல் ------------- பருவத்தில் அமைந்துள்ளது. **5. வருகைப்**

### ஆ) குறுவினாக்கள்

**1. பிள்ளைத்தமிழ் - குறிப்பு எழுதுக.**
1. தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பிள்ளைத்தமிழ்.
2. இறைவனையோ, நல்லாரையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரைக் குழந்தையாகப் பாவித்துக் குழந்தைப்பருவ நிகழ்ச்சிகள் எல்லாம் அமையப் பாடப்படும் நூல் பிள்ளைத்தமிழ் ஆகும்.

**2. குமரகுருபரர் - குறிப்பு எழுதுக.**
1. குமரகுருபரர் பிறந்த ஊர் திருவைகுண்டம்.
2. இவரின் பெற்றோர் பெயர் சண்முகசிகாமணிக் கவிராயர் - சிவகாம சுந்தரியம்மை ஆவர்.
3. ஐந்து வயது வரை ஊமையாக இருந்த குமரகுருபரர் திருச்செந்தூர் முருகப்பெருமானின் அருளால் பேசியமையால் அவர்மீது **கந்தர் கலிவெண்பா** பாடினார்.
4. இவர் வாழ்ந்த காலம் பதினேழாம் நூற்றாண்டு.
5. குமரகுருபரர் காசியில் இறைவனது திருவடியடைந்தார்.

**3. ஆண்பாற்பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள் யாவை ?**

1. காப்பு 2. செங்கீரை 3. தால் 4. சப்பாணி 5. முத்தம்
6. வருகை 7. அம்புலி 8. சிற்றில் 9. சிறுபறை 10. சிறுதேர்

**4. பெண்பாற்பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள் யாவை ?**

1. காப்பு 2. செங்கீரை 3. தால் 4. சப்பாணி 5. முத்தம்
6. வருகை 7. அம்புலி 8. அம்மானை 9. கழங்கு 10. ஊசல்

### இ) சிறுவினா

**1. குமரகுருபரர், முத்துக்குமாரசுவாமியை எங்ஙனம் போற்றுகிறார் ?**

**முத்துக்குமாரசுவாமியைக் குமரகுருபர் போற்றுதல் :-**

உலகம் குளிர்ச்சியடையும் படி எமது அறிவினில் ஒளிவீசுகின்ற சந்திரனே! இதயம் இளகும்படி அறிவில் தோன்றுகின்ற கதிரவனே! நூல்களின் நிறைந்த அறிவின் முதிர்வாகிய இனிய தேனே! குற்றமற்ற ஞானியர் விரும்பும் கருணை நீர் பெருகுகின்ற கடலே! என்றும் ஞானிகளும் அறிவதற்கு அரிதான பரம்பொருளே! என்றும் வளங்கள் நிறைந்த வைத்தீசுவரன் கோவிலில் எழுந்தருளியிருக்கும் குமரவள்ளலே! என இவ்வாறெல்லாம் குமரகுருபரர் முத்துக்குமாரசுவாமியைப் போற்றுகிறார்.

இயல் 3 | 2. இலக்கியத்தில் நகைச்சுவை | உரைநடைப்பகுதி

## அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக:-**

| | | விடைகள் |
|---|---|---|
| 1. நகைச்சுவை | - ---------------- | 1. நகை + சுவை |
| 2. மண்ணுலகம் | - ---------------- | 2. மண் + உலகம் |
| 3. உள்ளொதுங்கி | - ---------------- | 3. உள் + ஒதுங்கி |
| 4. புத்துணர்ச்சி | - ---------------- | 4. புதுமை + உணர்ச்சி |
| 5. சிற்றிலக்கியம் | - ---------------- | 5. சிறுமை + இலக்கியம் |

**2. சேர்த்து எழுதுக:-**

| | | |
|---|---|---|
| 1. அங்கும் + இங்கும் | - -------------- | 1. அங்குமிங்கும் |
| 2. வால் + எங்கே | - ------------- | 2. வாலெங்கே |
| 3. இயற்கை + அன்னை | - -------------- | 3. இயற்கையன்னை |
| 4. குரங்கு + அரசர் | - ------------- | 4. குரங்கரசர் |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

| | |
|---|---|
| 1. இலக்கியச் சுவைகளில் மிகவும் நுட்பமானது ------------- | 1. நகைச்சுவை |
| 2. நகைச்சுவையுணர்வு இல்லாதவருக்குப் பகலும் ---------- தோன்றும். | 2. இருளாய்த் |
| 3. கம்பர் இயற்றிய நூல் ----------------- | 3. கம்பராமாயணம் |

## ஆ) குறுவினாக்கள்

**1. நகைச்சுவைப் பற்றிக் காந்தியடிகள் கூறியதனை எழுதுக.**

நகைச்சுவை உணர்வு மட்டும் தமக்கு இல்லையெனில், எப்பொழுதோ தமது வாழ்க்கையை இழந்திருக்கக்கூடும் எனக் காந்தியடிகள் கூறினார்.

**2. ‘மருமக்கள் வழி மான்மியம்’ - குறிப்பு எழுதுக.**

1. நாஞ்சில் நாட்டுக் கவிஞர் தேசிக விநாயகனாரின், ‘மருமக்கள்வழி மான்மியம்’ ஒரு நகைச்சுவைக் களஞ்சியமாகும்.
2. இக்கதையில் வரும் மருமகன் பள்ளியில் பயிலும் போது, அரைஞாண், புத்தகம், சிலேட்டு, மோதிரம், கடுக்கண், குடை முதலியவற்றை பணயம் வைத்துத் தின்பண்டம் முதலியவற்றிருக்குச் செலவிட்டதைக் கூறி நகைப்பூட்டுகிறார்.

## இ) சிறுவினாக்கள்

**1. நகைச்சுவை – குறிப்பு எழுதுக.**

1. இலக்கியச் சுவைகளுள் மிகவும் நுட்பமானது நகைச்சுவை. தொல்காப்பியம் ‘எள்ளல், இளமை, அறியாமை, மடமை ஆகிய நான்கு காரணங்களால் நகைச்சுவை தோன்றும் என்கிறது.
2. நகைச்சுவை இல்லாதவர்க்குப் பகலும் இருளாய்த் தோன்றும் என்கிறார், ‘வள்ளுவர்’.
3. மனித இனம் மட்டுமே நகைச்சுவையை வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றிருக்கிறது. இலக்கியங்களில் கோமாளிகளும், அரசவையில் விகடகவிகளும், நகைச்சுவைக்காகப் படைக்கப்பட்டவர்கள்.
4. பிறர் மனம் புண்படாத வகையில் நகைச்சுவை அமைய வேண்டும். உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும், எழுச்சிக்கும் நகைச்சுவை ஓர் அறிகுறியாகும்.

**2. கம்பரின் நகைச்சுவையுணர்வை அவர்தம் பாடல் வழி விளக்குக.**

பாடல்: **“அஞ்சலை அரக்க! பார்விட் டந்தர அடைந்த னன்**
**வெஞ்சின வாலி, மீளான், வாலும்போய் வீழ்ந்ததன்றே…..”** (கம்பராமாயணம்)

1. சீதையைத் தேடி தன் முன் வந்த அனுமனைப் பார்த்து இராவணன், **“வாலி நலமா?”** என்று வினவினான்.
2. வாலியின் வாலினால் பிணைக்கப்பட்டு இராவணன் அடைந்த இழிவை அனுமன் நன்கறிந்ததினால்,“ **அஞ்சவேண்டா! அரக்கர் தலைவா ! வாலியும் இறந்தான், அவனது வாலும் இறந்துவிட்டது**” என்று கூறுவதன் மூலம் கம்பரின் நகைச்சுவையுணர்வினை அறிகிறோம்.
3. வாலி மீளாது போயினும் அவனது வால் மீண்டுவிட்டால் என்ற அச்சம் இராவணனுக்கு இருக்கலாம் என அனுமன் எண்ணி இகழ்ச்சி மேலிட இராவணனை நகைப்பிற்கு உரியவனாக்குகிறான்.

3. **மயிலின் கழுத்து நீண்டிருப்பதற்குப் பாரதிதாசனார் புனையும் கற்பனை யாது?**
**பாரதிதாசனார் புனையும் கற்பனை:** "அயலான் வீட்டில் அறையில் நடப்பதை எட்டிப் பார்க்கா திருப்ப.......
**பாடல் விளக்கம்:**
1. இப்பாடல் வரிகள் மூலம் 'மயிலின் கழுத்து நீண்டிருப்பதையும், பெண்களின் கழுத்து குட்டையாய் இருப்பதனையும் நகைச்சுவை ததும்பக் கூறுகிறார்'.
2. "அண்டை வீட்டில் நடப்பதை எட்டிப் பார்க்காதிருப்பதற்காகவே பெண்களுக்கு குட்டையானக் கழுத்தை அளித்தான்.
3. அயலவர் வீட்டை எட்டிப் பார்க்காமல் இருப்பதற்கு அழகிய மயிலைப் போன்ற நிமிர்ந்து நிற்கும் நீண்ட கழுத்தை இயற்கையன்னை உனக்கு அளித்தாள் எனக் கற்பனையாகப் பாரதிதாசன் கூறுகிறார்.

## ஈ) நெடுவினாக்கள்

1. **கலிங்கத்துப்பரணியில் அமைந்துள்ள நகைச்சுவை நயத்தை விளக்குக.**
1. கலிங்கத்துப்பரணியில் சயங்கொண்டார் தம் பாடலில் காணமுடியாத பேய்களைக் குறித்து நகைச்சுவை நயத்தோடு குறிப்பிட்டுள்ளார்.
2. காளிதேவியைச் சூழ்ந்திருந்த பேய்கள் கன்னங்கரேலென்று, நெடிய வாயும், பனைகளை ஒத்த காலும், கையுமுடையனவாய் இருந்தன. அதன் வாய் பெரிய குகையைப் போலிருந்தன.
3. பேய்கள் உட்கார்ந்திருந்தால் அதன் முழங்கால்கள் முகத்திற்கு மேலே மூன்று முழம் உயரமாயிருந்தது. மூக்கிலுள்ள முடமயிர்கள், பெரும் பாம்புகள் போலத் தொங்கிக்கொண்டிருந்தன.
4. செவிகளில் ஆந்தைகள் உள் ஒதுங்கியிருந்தன. வௌவால்கள் அங்குமிங்கும் பறந்தன. அதன் தலை வானத்தைத் தகர்ப்பது போலவும், உதடுகள் மார்பு வரை தாழ்ந்தும் காணப்பட்டதாகக் கூறுகிறார்.

2. **காளமேகப்புலவரின் நகைச்சுவையுணர்வை விவரிக்க.**
**காளமேகப்புலவரின் நகைச்சுவையுணர்வு :-**
1. காளமேகப்புலவர் இருபொருள் தரக் கூடியச் சொற்களைப் பாட்டில் அமைத்துப் பாடுவதில் வல்லவர், **நாங்கள் கவிராசர்கள்** என்று செருக்குடன் கூறிய புலவர்களின் செருக்கை அடக்கும்படி அமைந்துள்ளது.
2. **கவிராசர்கள் - கவி** என்றால் **குரங்கு** என்று பொருள். "அரசர்கள் புகழ்ந்து போற்றும் புலவர்களாகிய நீங்கள் குரங்கரசர்கள் என்றால் நீண்ட வாலும், கூர்மையான நகங்களும், ஊன்வடிந்த கண்களும், நான்கு கால்களும் இல்லையே! நீங்கள் எப்படிக் கவிராயர்கள் எனக் கூறிக்கொள்ள முடியும்?"என காளமேகப்புலவர் எள்ளி நகையாடினார்.

**இயல் 3 — 3. குழந்தையின் இயல்பு — துணைப்பாடப்பகுதி**

1. **குழந்தையின் இயல்பு என்னும் கதையை சுருக்கி எழுதுக.**

1. முன்னுரை
2. குழந்தையின் பிடிவாதம்.
3. அடம் பிடிக்கும் குழந்தையை அடக்க முடியாதா?
4. குழந்தையாகப் பீர்பால்
5. எனக்கு யானை வேண்டும்
6. பானை வேண்டும்
7. பானைக்குள் யானை.
8. முடிவுரை

1. **முன்னுரை:-**
ஒருநாள் அரசவைக்கு அமைச்சர் பீர்பால் சரியான நேரத்திற்குள் வரவில்லை. எனவே அக்பர் அவரை வீட்டில் சென்று அழைத்து வரும்படி காவலாளிக்கு உத்தவிட்டு வரவழைத்தார். அக்பர் பீர்பாலிடம் "ஏன் இவ்வளவு தாமதம்? என்று கேட்டார்".

2. **குழந்தையின் பிடிவாதம்:-**
பீர்பால் அக்பரிடம், "அரசே என் மகனின் அழுகையை நிறுத்திவிட்டு வருவதற்குத் தாமதமாகி விட்டது" என்று கூறினார். அக்பர் உடனே "ஒரு குழந்தையின் அழுகையை நிறுத்தவா உங்களால் முடியவில்லை? நீங்கள் கூறுவது நம்பமுடியவில்லையே" என்று அக்பர் கூறினார்.

3. **அடம் பிடிக்கும் குழந்தையை அடக்க முடியாதா?**
"அடம்பிடிக்கும் குழந்தையிடம் நம் வாய்ச்சொல் எடுபடாது என்பதை இப்பொழுது நான் மெய்ப்பித்துக் காட்டுகிறேன் என்று பீர்பால் கூறினார். அதை எப்படி மெய்ப்பித்துக் காட்டுவீர்கள் என்று அக்பர் கேட்டார்.

**4. குழந்தையாக பீர்பால்:**

"நான் சிலமணி நேரத்திற்கு குழந்தையாக அழுது நடிக்கிறேன். என்னைச் சமாதானம் செய்யுங்கள்" என்றார் பீர்பால். உடனே அக்பர் "அவ்வளவு தானே நீங்கள் குழந்தையாக நடியுங்கள்: நான் எவ்வளவு எளிதாகச் சமாளிக்கிறேன் பாருங்கள்" என்றார். அக்பரும் சம்மதித்தார்.

**5. எனக்குயானை வேண்டும்:**

பீர்பால் தன்னைக் குழந்தையாக நினைத்துக் கொண்டு கை, கால்களைத் தரையில் உதைத்து அழத் தொடங்கினார். அக்பர் "அடடே, ஏனப்பா அழுகின்றாய்? உனக்கு என்ன வேண்டுமானாலும் வாங்கித் தருகின்றேன். நல்லப் பிள்ளையாய் அழாமல் இரு" என்று கூறினார். அதெல்லாம் முடியாது எனக்கு யானை வேண்டும் என்று கேட்டார்.

அக்பர் காவலாளியிடம் ஓர் யானை பொம்மையைக் கொண்டு வரச் செய்தார். பீர்பால் மீண்டும் அழத் தொடங்கினார். நான் கேட்டது இந்த யானை இல்லை என்றதும் அரசன் காவலாளியிடம் பட்டத்து யானையைக் கொண்டுவரச்செய்தார். அதைப் பார்த்து பீர்பால் மீண்டும் அழத் தொடங்கினார்.

**6. பானை வேண்டும்:-**

அரசன் "மீண்டும் ஏன் அழுகின்றாய்?" எனக் கேட்டார். எனக்கு ஒரு பானை வேண்டும் என்று கேட்டதும் பானையா! காவலாளி, உடனே சென்று ஒரு பானை கொண்டுவா என்றார் அரசன். காவலாளி கொண்டுவந்த பானையைப் பார்த்து பீர்பால் மீண்டும் கை, கால்களைத் தரையில் உதைத்து அழத் தொடங்கினார். அக்பர் கோபமாக "நீ கேட்டதெல்லாம் நான் தருகிறேனே, அப்புறமும் ஏன் அழுகின்றாய்?" எனக் கேட்டார்.

**7. பானைக்குள் யானை:-**

பீர்பால், "அப்பா! அப்பா! இந்த யானையைப் பானைக்குள் போட்டுத்தாப்பா" என்றார். அரசர் உடனே இவ்வளவு பெரிய யானையை எப்படி இந்தப் பானைக்குள் போட முடியும், அதெல்லாம் முடியாது என்றார். "நான் எது சொன்னாலும் முடியாது என்கிறீர்களே" "எனக்கு இப்பவே யானையைப் பானையில் போட்டுத் தாங்க" என்று பீர்பால் வீறிட்டு அழத் தொடங்கினார்.

**8. அக்பரின் தோல்வி:-**

அக்பர் தமது தோல்வியை ஒப்புக் கொண்டார். இப்போது புரிந்து கொண்டீர்களா? என் மகனும் இப்படித்தான் அழுது அடம் பிடித்தான். அவன் அழுகையை நிறுத்தவே பல மணிநேரம் ஆயிற்று என்று கூறினார் பீர்பால். அக்பர் பீர்பாலிடம் நீங்கள் என்னை வென்று விட்டீர்கள் என்றார். பீர்பால் சிரித்தபடியே தன் இருக்கைக்குச் சென்றார்.

## இயல் 3 — 4. யாப்பு, அணி — இலக்கணப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-**

1. அசை --------- வகைப்படும்.
   அ) நான்கு ஆ) மூன்று **இ) இரண்டு**
2. செய்யுள் இயற்றும் இலக்கணத்துக்கு ------------ எனப் பெயர்.
   அ) அணியிலக்கணம் ஆ) பொருள் இலக்கணம் **இ) யாப்பிலக்கணம்**
3. உவமானத்தின் தன்மையை உவமேயத்தின்மேல் ஏற்றிக் கூறுவது ----------- அணி.
   அ) உவமையணி **ஆ) உருவகஅணி** இ) இயல்பு நவிற்சிஅணி

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. அசைகள் பல சேர்ந்து அமைவது ---------- எனப்படும் — **1. சீர்**
2. உவம உருபு வெளிப்பட வருவது ------------ அணி. — **2. உவமை**
3. மதிமுகம் - உருவகமாக மாறும் போது -------- என வரும் — **3. முகமதி**
4. யாப்பு என்றால் --------- என்பது பொருள். — **4. கட்டுதல்**

### ஆ) குறுவினாக்கள்

**1. செய்யுள் உறுப்புகள் எத்தனை ? அவை யாவை?**

1. செய்யுளின் உறுப்புள் **ஆறு** வகைப்படும்.
2. அவையாவன, 1. எழுத்து 2. அசை 3. சீர் 4. தளை 5. அடி 6. தொடை

**2. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

1. ஓசைநயத்தை வேறுபடுத்தி அறிவதற்காக பாக்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
2. அவையாவன, 1. வெண்பா 2. ஆசிரியப்பா 3. கலிப்பா 4. வஞ்சிப்பா

**3. அணி என்றால் என்ன?**

1. **அணி :-** அணி என்றால் அழகு என்பது பொருள்.
2. புலவர்கள், தங்கள் கற்பனையாலும், மொழிப் புலமையினாலும் சொல்லழகும், பொருளழகும், தோன்றக் கவிதைகளை இயற்றுவர்.
3. அச்செய்யுள்களில் காணப்படும் அழகினை விளக்கிக் கூறப்படுவதே 'அணி இலக்கணம்' எனப்படும்.

## இயல் 3 | 5. நிறுத்தற்குறிகள் | மொழித்திறன்பகுதி

**1. வேலை வேண்டி முருகனுக்கும் நிறுவன மேலாளருக்கும் இடையே நடந்த உரையாடலை நிறைவு செய்க.**

முருகன் : வணக்கம் ஐயா.
மேலாளர் : வணக்கம் உட்காருங்கள்.
முருகன் : **ஐயா, என் பெயர் முருகன். நான் கணிணி பொறியியலில் முதுகலைப்பட்டம் பெற்றிருக்கிறேன். நேர்காணலுக்கு இன்றைய தேதி வருமாறு உங்களிடமிருந்து அழைப்புக் கடிதம் வந்தது.**
மேலாளர் : உங்களுடைய சான்றிதழ்களைக் கொடுங்கள். இதற்கு முன் எங்கு வேலை பார்த்தீர்கள்?
முருகன் : **பெங்களூரில் ஹெச்.சி. எல்-ல் வேலை பார்த்தேன்.**
மேலாளர் : அப்படியா, நல்லது. பெங்களூரிலேயே புகழ்பெற்ற நிறுவனமாயிற்றே. ஆனால் அங்கு வேலையை விட்டுவிட்டுச் சென்னையில் ஏன் பணிபுரிய வந்தீர்கள்?
முருகன் : பெற்றோரின் உடல்நலனைக் கவனிக்கும்பொருட்டு, அவர்கள் இருக்கும் இடத்திற்கு இடமாறுதலும் பணிமாறுதலும் பெற்று வந்தேன்.
மேலாளர் : **மிக நன்று. வருமானம் ஒன்றையே பெரிதாகக் கருதும் இக்காலத்தில் பெற்றோர் மீது நீங்கள் வைத்திருக்கும் பற்று போற்றுதலுக்குரியது.**
முருகன் : என் கடமையைத்தான் நான் செய்தேன்.
மேலாளர் : உங்களைப்போல் பொறுப்பானவர்களைத்தான் நான் தேடிக்கொண்டு இருக்கிறேன். நீங்கள் நாளைமுதல் இங்குப் பணிபுரிய வரலாம். உங்களுடைய பணியமர்வு ஆணையைச் சிறிதுநேரம் காத்திருந்து பெற்றுச் செல்லுங்கள்.
முருகன் : **மிக்க நன்றி ஐயா! நான் காத்திருந்து பெற்றுச் செல்கிறேன்.**

**2. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.**

1. எல்லை காத்தனர் தொல்லை தவித்தனர் ஆனால் அவர் வாழ்வில் துன்பத்திற்கோர் எல்லையில்லை தொல்லைக்கோர் அளவில்லை

   **விடை:** "எல்லை காத்தனர்; தொல்லை தவித்தனர்; ஆனால், அவர் வாழ்வில் துன்பத்திற்கோர் எல்லையில்லை, தொல்லைக்கோர் அளவில்லை".
2. ஒரு கவிதையென்றால் கற்பனை உணர்ச்சி கருத்து வடிவம் ஆகிய நான்கும் இருக்க வேண்டும் என அறிஞர் கூறுவர்

   **விடை:** "ஒரு கவிதையென்றால், கற்பனை, உணர்ச்சி, கருத்து, வடிவம் ஆகிய நான்கும் இருக்க வேண்டும்" என அறிஞர் கூறுவர்.
3. திருக்குறள் ஒரு வாழ்வு நூல் அது தமிழகத்தின் செல்வம் அதன் திரண்ட கருத்தெல்லாம் ஒன்றே ஒன்று அது மக்களாய்ப் பிறந்தோரெல்லாம் மக்கட்பண்போடு வாழ்தல் வேண்டும்

   **விடை:** திருக்குறள் ஒரு வாழ்வு நூல்; அது தமிழகத்தின் செல்வம்! அதன் திரண்ட கருத்தெல்லாம் ஒன்றே ஒன்று! அது மக்களாய்ப் பிறந்தோரெல்லாம், மக்கட்பண்போடு வாழ்தல் வேண்டும்.
4. சேரநாடு வேழமுடைத்து பாண்டிநாடு முத்துடைத்து சோழநாடு சோறுடைத்து தொண்டைநாடு சான்றோருடைத்து என்பது ஔவையின் வாக்கு.

   **விடை:** "சேரநாடு வேழமுடைத்து! பாண்டிநாடு முத்துடைத்து! சோழநாடு சோறுடைத்து! தொண்டைநாடு சான்றோருடைத்து!" என்பது ஔவையின் வாக்கு.
5. சிலப்பதிகாரம் தமிழில் முதன்முதலில் தோன்றிய காப்பியமாகும் இதனைக் குடிமக்கள் காப்பியம் என அறிஞர் போற்றுவர்

   **விடை:** "சிலப்பதிகாரம் தமிழில் முதன்முதலில் தோன்றிய காப்பியமாகும். இதனைக் குடிமக்கள் காப்பியம்" என அறிஞர் போற்றுவர்.

**3. கீழ்க்காணும் தொடர்களில் உரிய நிறுத்தக்குறிகளை இடுக.**

1. நான் தண்டமிழைக் கற்று என் வாழ்வில் உயர்ந்தேன் என்று தமிழாசிரியர் கூறினார்
   **விடை:** "நான் தண்டமிழைக் கற்று, என் வாழ்வில் உயர்ந்தேன்" என்று தமிழாசிரியர் கூறினார்.
2. அண்ணா சிந்தி சீர்தூக்கு செயல்படு என்று கூறினார்
   **விடை:** அண்ணா, சிந்தி! சீர்தூக்கு! செயல்படு! என்று கூறினார்.
3. தமிழ் இலக்கணம் ஐவகைப்படும் அவையாவன எழுத்து சொல் பொருள் யாப்பு அணி
   **விடை:** தமிழ் இலக்கணம் ஐவகைப்படும். அவையாவன, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.
4. அடடே ஏனப்பா அழுகிறாய் என்னவேண்டும் உனக்கு
   **விடை:** அடடே...! ஏனப்பா அழுகிறாய்? என்னவேண்டும் உனக்கு?
5. அனுமனைப் பார்த்து இராவணன் வாலி நலமா என்று கேட்டான்
   **விடை:** "அனுமனைப் பார்த்து இராவணன், வாலி நலமா?" என்று கேட்டான்

**4. கட்டங்களில் தமிழெண்களை பொருத்துக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | க | 6 | சா | 11 | கக | 16 | கசா |
| 2 | உ | 7 | எ | 12 | கஉ | 17 | கஎ |
| 3 | ௩ | 8 | அ | 13 | க௩ | 18 | கஅ |
| 4 | ச | 9 | கூ | 14 | கச | 19 | ககூ |
| 5 | ரு | 10 | க0 | 15 | கரு | 20 | உ0 |

**5. கட்டுரை பயிற்சி : தீ விபத்தும் தடுக்கும் முறைகளும்**

1. முன்னுரை
2. தீ விபத்து
3. தீ விபத்து ஏற்படும் விதம்
4. தீ விபத்தின் வகைகள்
5. தீ விபத்தைத் தடுக்கும் முறைகள்
6. தீயை அணைக்கும் முறைகள்
7. முடிவுரை

**1. முன்னுரை:**

ஐம்பூதங்களுள் இன்றியமையாத ஒன்றாகப் அமைவது தீயாகும். தீயை நல்ல வழியில் பயன்படுத்தினால் நமக்கு நன்மையே அளிக்கும். கவனக்குறைவாகப் பயன்படுத்தினால் அதனால் விளையும் ஆபத்துகள் சொல்லொணாத் துயரத்தை ஏற்படுத்திவிடும். தீ விபத்தின் வகைகளையும் தடுக்கும் முறைகளையும் பின்வருமாறு காணலாம்.

**2. தீ விபத்து:**

தீபாவளி போன்ற விசேஷ நாட்களில் அதிகமாக தீ விபத்துகள் ஏற்படுகின்றன. தீ விபத்துக்கு முக்கியக் காரணமாக இருப்பது கவனக்குறைவே ஆகும். தீ விபத்து ஆயிரக்கணக்கான உயிர்களை அழிக்கும்.

**3. தீ விபத்து ஏற்படும் விதம்:**

குழந்தைகளுக்கு எட்டும் இடத்தில் தீப்பெட்டி போன்ற எரிபொருள்களை வைப்பதால் எதிர்பாராத தீ விபத்து ஏற்படுகிறது. குழந்தைகளிடம் வெடிபொருள்களைக் கொடுத்து வெடிக்கச் சொல்வதனாலும் பெரும்பாலும் தீ விபத்து ஏற்படுகிறது. கவனக்குறைவாகக் குப்பைகளைக் கொளுத்தும்போதும், அடுப்பில் கவனமின்றி சமைக்கும்போதும் தீ விபத்து ஏற்படுகிறது.

**4. தீ விபத்தின் வகைகள்:**

1. எரிந்து சாம்பலாகும் பொருள் தொடர்பானவை 2. மின்சார சாதனங்கள் தொடர்பானவை 3. பெட்ரோலியப் பொருட்கள் தொடர்பானவை 4. உலோகப் பொருட்கள் தொடர்பானவை 5. அணு ஆற்றல் தொடர்பானவை 6. சமையல் எரிவாயு தொடர்பானவை ஆகும்.

**5. தீ விபத்தை தடுக்கும் முறைகள்:**

வெடிப்பொருட்களை வெடிக்கும்போது அருகில் தண்ணீரை வைத்துக் கொள்ள வேண்டும். தீ எளிதில் பற்றும் குழந்தைகளுக்கு எட்டாத தொலைவில் வைக்க வேண்டும். தீ விபத்தின் விளைவுகளையும் உயிரிழப்புகளையும் பற்றி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

**6. தீயை அணைக்கும் முறைகள்:**

மின்சாரம் தொடர்பான தீ விபத்து ஏற்பட்டால் உடனே தீ அணைப்புத் துறைக்குத் தகவல் கொடுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தண்ணீர் ஊற்றி அணைக்க முற்படக் கூடாது. தீ விபத்தின் போது மணல், சாக்கு மற்றும் தீ அணைப்பான்களை பயன்படுத்த வேண்டும். சாம்பலாகும் பொருட்களுக்கு மட்டுமே தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும்.

**7. முடிவுரை:**

நாம் அனைவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடனும் செயல்பட்டு தீ விபத்து பற்றிய விழிப்புணர்ச்சியை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

**6. தயக்கமின்றி தமிழிலேயே பேசுவோம்.**

கவிதாவும் மாலாவும் தோழிகள். ஒருநாள் பகலுணவு வேளையின்போது மாலா வகுப்புக்கு வருகிறாள்.

கவிதா : "மாலா, வா வா. என்னப்பா **அரைநாள் விடுப்பா**? ஏன் **காலையில் வகுப்பிற்கு** வரவில்லை. **தாமதமாக** எழுந்தாயா?"

மாலா : **"இல்லை**, கவிதா, **பள்ளிக்குக்** கிளம்பும்போது என் அம்மா **தபால் நிலையத்துக்குப்** போகச் சொல்லிட்டாங்க. ஊரிலிருக்கின்ற என் **அத்தைக்கு அவசரமாக பணவிடை** அனுப்பனும்னு சொன்னாங்க. அதனால்தான் **காலையில்** வரமுடியல. சரி, **தமிழ் ஆசிரியர் தேர்வு** வைத்தார்களா?

கவிதா : வைத்தார்கள். ஆனால் என்னால் எல்லாக் **கேள்விகளுக்கும் விடை** எழுத முடியல. அதற்குள் **மணி** அடித்து விட்டது.

மாலா : அப்படியா?கவலைப்படாதே, **ஆசிரியர்** மறுபடியும் **தேர்வு** வைப்பார்கள். அப்போது நன்றாக எழுதலாம்.

## வளரறி செயல்பாடுகள்

**7. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.**

**வினாக்கள்:**

1. உரைப்பத்தியின் மையக்கருத்து யாது? **சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலைப் பெறுவதற்கு.**
2. அகரமுதலிக்கு இணையானவர் யார்? **கற்றல், கேட்டல் இரண்டனையும் பெற்றிருப்பவர்.**
3. புத்தகப்பூச்சி என யாரை அழைக்கிறோம்? **புத்தகங்களை மட்டுமே படித்து கொண்டிருப்பவர்கள்.**
4. பட்டறிவுக்கல்வி ஏன் தேவை? சுயசிந்தனையில் **சிந்திக்கும் ஆற்றல் மற்றும் எழுதும் திறன் பெற**.
5. சிந்தனையின் விளைவாகத் தோன்றுவது எது? **ஆக்கத்திறன் மற்றும் அறிவு**

**8. ஒரு பொருள் குறித்த சொற்களை கண்டறிந்து பொருத்துக.**

1. மிகுதி - கூறு, விளம்பு, மொழி, இயம்பு, உரை - **சால, தவ, நனி, கூர், கழி**
2. பேசு - ஞாயிறு, கதிரவன், பரிதி, பகலவன், வெய்யோன் - **கூறு, விளம்பு, மொழி, இயம்பு, உரை**
3. சூரியன் - சால, தவ, நனி, கூர், கழி - **ஞாயிறு, கதிரவன், பரிதி, பகலவன், வெய்யோன்**
4. குழந்தை - புவி, தரணி, நானிலம், பார், வையம் - **பிள்ளை, குழவி, மகவு, சேய்**
5. உலகம் - பிள்ளை, குழவி, மகவு, சேய் - **புவி, தரணி, நானிலம், பார், வையம்**

**9. விடுகதைகளுக்கான விடை தருக.**

1. பூட்டில்லா பெட்டி, பெட்டிக்குள் வைரம், வைரத்து ஒளியாலே வையகமே தெரியுது அஃதென்ன? **கண்**
2. எட்டாத தூரத்திலே எவரும் இல்லாக்காட்டிலே எழிலான பெண்ணொருத்தி இரவெல்லாம் சிரிக்கின்றாள் அவள் யார்? **நிலவு**
3. தன்னைத்தான் பலி கொடுப்பான் மற்றவருக்கு ஒளி கொடுப்பான் - அவன் யார்? **மெழுகுவர்த்தி**
4. உப்பை உண்டவன் உறங்காமல் அலைகிறான். அவன் யார்? **கடல்**
5. அக்காள் வீட்டுக்கு தங்கை போகலாம்: தங்கை வீட்டுக்கு அக்காள் போக முடியாது. அவையென்ன? **உழக்கு, படி.**

**10. கீழ்க்காணும் எழுத்துகளை முதல் எழுத்தாக அமைத்துப் பெயர், ஊர் / இடம், பொருள், பறவை, விலங்கு, பூ, தொழில், கருவி ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களைக் கண்டறிந்து அட்டவணையை நிரப்புக.**

| எழுத்து | பெயர் | ஊர் இடம் | பொருள் | பறவை | விலங்கு | பூ | தொழில் | கருவி |
|---|---|---|---|---|---|---|---|---|
| வா | வாணி | வாரங்கல் | வாளி | வான்கோழி | - | வாழைப்பூ | வாணிபம் | வாள் |
| கா | காதர் | காட்பாடி | காசு | காகம் | காட்டுப்பூனை | காட்டுமல்லி | காவலர் | - |
| செ | செந்தில் | செம்பட்டு | செம்பு | செம்போத்து | செந்நாய் | செம்பருத்தி | செவிலியர் | - |
| தி | தினகரன் | திருச்சி | திருகு | | திமிங்கலம் | திசம்பர் பூ | திவான் | திருப்புலி |
| பொ | பொன்னி | பொன்னேரி | பொன் | - | பொதிஎருமை | - | பொற்கொல்லர் | - |

**11. பழமொழிகளின் பொருளறிந்து பொருத்துக.**

1. தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை - **உறவுமுறை**
2. ஆடிப்பட்டம் தேடி விதை - **உழவு**
3. மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே - **அறிவுரை**
4. தை பிறந்தால் வழி பிறக்கும் - **நம்பிக்கை**
5. பசியாமல் இருக்க வரந்தருவேன், கொஞ்சம் பழையது இருந்தால் போடு. - **நகைச்சுவை**

**12. கோடிட்ட இடத்தை பொருளறிந்து நிரப்புதல்**

1. உன் வீட்டில் ………….. அறைகள் உள்ளன. (எத்தனை, எத்துனை)
   **விடை : எத்தனை**
2. தாயைக் கண்டதும் குழந்தைக்குத்தான் ……….. மகிழ்ச்சி. (எத்தனை, எத்துனை)
   **விடை : எத்துனை**
3. ………..க்கின்ற நாய் கடிக்காது. (குரை, குலை)
   **விடை : குரை**
4. தென்னைமரத்தில் தேங்காய்கள் ………….. யாகத் தொங்குகின்றன. (குரை குரை, குலை குலை)
   **விடை : குலை குலை**
5. நாள்தோறும் விடியற்காலையில் எழுவது என் ……… (வழக்கம், பழக்கம்)
   **விடை : வழக்கம்**
6. விளையாட்டு வீரர் சச்சின் இடக்கை ……….. உடையவர். (வழக்கம், பழக்கம்)
   **விடை : பழக்கம்**
7. இன்று மாலை நடைபெறும் கூட்டத்தில் ……….. கலந்து கொள்ளுதல் வேண்டும். (தவறாமல், தவிராமல்)
   **விடை : தவிராமல்**
8. பூம்புகார் ………… ஒரு காலத்தில் சிறந்த கடற்கரை நகரமாக விளங்கியது. (பட்டினம்,பட்டணம்)
   **விடை : பட்டினம்**

## கற்றலடைவு சிறுமதிப்பீடு

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1=5**

அ) இலக்கியச் சுவைகளில் மிகவும் நுட்பமான சுவை…………. **அ) நகைச்சுவை**
ஆ) நகைச்சுவையுணர்வு இல்லாதவருக்கு பகலும் ………… ஆகத் தோன்றும். **ஆ) இருள்**
இ) கம்பராமாயண வானரத்தலைவன் …………. **இ) வாலி**
ஈ) கலிங்கத்துபரணியின் ஆசிரியர் …………… **ஈ) செயங்கொண்டார்**
உ) மருமக்கள் வழி மான்மியம் ஒரு ………….. களஞ்சியம். **உ) நகைச்சுவை**

**2. கீழ்க்காணும் குறட்பாவில் பயின்று வரும் அணியைத் தேர்ந்தெடுக்க:** **2x1=2**

அ) நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு. (**உவமையணி**, எடுத்துக்காட்டு உவமையணி)

ஆ) உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. ( **உவமையணி**, எடுத்துக்காட்டு உவமையணி)

**3. கீழ்க்காணும் உரைபப்த்தியில் இடம்பெற்றுள்ள நகைச்சுவையை விளக்குக.** **3x1=3**

தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன் அவர்கள், பேசுவதற்காக ஓர் ஊருக்குச் சென்றார். தொடர்வண்டியில் சென்று காலையில் அவ்வூரில் இறங்கினார். அவரைப் பேசுவதற்கு அழைத்தவர்கள் மாலையிட்டு அவரை வரவேற்றார்கள். அதனைக் கண்ட கி.வா.ஜகந்நாதன், 'ஏதேது? காலையிலே மாலை வந்துவிட்டதே!' என்றார்.

**விடை:**

**மாலை என்னும் சொல்லுக்கு மாலைப்பொழுது மற்றும் மலரால் தொடுக்கப்பட்ட மாலை எனும் இருபொருள்கள் உண்டு. காலையில் வந்த தமக்கு மாலையிட்டு வரவேற்ற வரவேற்பாளர்களிடம் காலையிலேயே மாலைப்பொழுது வந்துவிட்டது என்றும் காலையிலே மலர்மாலை வந்துவிட்டது எனவும் இருபொருள் வருமாறு நகைச்சுவையோடு சிலேடையாக கூறுகிறார்.**

## தொகுத்தறி மதிப்பீடு
### மூன்றாம் பருவத்தேர்வு

8-ம் வகுப்பு மதிப்பெண்கள் - 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4x1=4**

1. வில்லிபாரதத்தை பாடியவர் ……………
2. தாமே ஒளிவிடக்கூடியவை ……………..
3. முடியரசன் பிறந்த ஊர் ……………..
4. இலக்கியச்சுவைகளில் மிகவும் நுட்பமானது …….

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **4x1=4**

1. பாடும் பாடல்---- இத்தொடரில் பாடல் என்பது ……..
   அ) நிலைமொழி ஆ) வருமொழி இ) பொதுமொழி
2. அசை ………வகைப்படும்.
   அ) நான்கு ஆ) மூன்று இ) இரண்டு
3. யாப்பு என்றால் ………என்பது பொருள்.
   அ) அடித்தல் ஆ) சிதைத்தல் இ) கட்டுதல்
4. விகாரப்புணர்ச்சி ……. வகைப்படும்.
   அ) ஐந்து ஆ) ஆறு இ) மூன்று

**III. பொருள் கூறுக.** **3x1=3**

1. பகழி - …………..
2. கலம் - …………...
3. புயம் - …………...

**IV. சேர்த்து எழுதுக.** **3x1=3**

1. அன்பு + உடைமை- ………….
2. மயில் + பொறி - …………..
3. உருவம் + சிலை - …………..

**V. பிரித்தெழுதுக.** **3x1=3**

1. அரும்பணி - …………..
2. பண்புடையார் - ………….
3. திருப்புயம் - ………….

**VI. பொருளறிந்து கீழ்க்காணும் தொடர்களை நிரப்புக.** **3x1=3**

1. உன் வீட்டில் …….. அறைகள் உள்ளன? (எத்தனை, எத்துணை)
2. நாள்தோறும் விடியற்காலையில் எழுவது என் ………(வழக்கம், பழக்கம்)
3. இன்றுமாலை நடைபெறும் கூட்டத்தில் ……கலந்து கொள்ளுதல் வேண்டும். (தவறாமல், தவராமல்)

**VII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** **4x3=12**

1. திருவருட்பா – குறிப்பு எழுதுக.
2. பண்பு இல்லாதவன் பெற்ற செல்வம் எத்தகையது?
3. தேவநேயப்பாவாணர் எங்கு, எப்போது பிறந்தார்?

4. திங்களைப் பாம்பு கொண்டற்று விளக்குக.
5. உண்மையான கவிஞன் எப்படி இருக்க வேண்டும் என முடியரசன் கருதுகிறார்?
6. மருமக்கள் வழி மான்மியம் - குறிப்பு எழுதுக.

**VIII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2x4=8**

1. உலகத்தாரால் பாராட்டப்படுபவர் யார்? ஏன்?
2. நகைச்சுவை குறிப்பு எழுதுக.
3. தேவநேயப்பாவாணரின் பண்பு நலன்கள் குறித்து எழுதுக.

**IX. அடிபிறழாமல் எழுதுக. 2+4=6**

1. பண்புடையார்ப் ………என்று தொடங்கும் குறள்.
2. வாடிய பயிரைக் ….. எனத்தொடங்கும் திருவருட்பா பாடல்.

**X. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3x2=6**

1. உடம்படு மெய் என்றால் என்ன?
2. புணர்ச்சி என்றால் என்ன? சான்று தருக.
3. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. அணி என்றால் என்ன?

**XI. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி. 1x5=5**

மணம் நுகர்ந்ததற்கு பணம் என்னும் கதையை சுருக்கி எழுதுக. **(அல்லது)**
**கட்டுரை:** உழைப்பே உயர்வு

**XII. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி. 1x3=3**

அழகனுக்கு அவனுடைய தந்தை புதிய மிதிவண்டி ஒன்றை வாங்கிக் கொடுத்தார். அழகன் தந்தையின் அறிவுரைப்படி அதனை மிகவும் விழிப்புடன் பாதுகாத்தான். ஒருநாள், அழகனின் நண்பன் சோழன் மிதிவண்டியை ஓட்டிப்பார்ப்பதற்காக அழகனிடம் கேட்டான். அழகனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. மிதிவண்டி பழுதாகி விடுமோ என்று அஞ்சினான். அதே நேரம் மிதிவண்டியை கொடுக்காவிட்டால், நண்பன் விலகிச் சென்று விடுவானோ என்றும் அச்சம் கொண்டான்.

**இந்நிலையில் அழகன் எத்தகைய முடிவு எடுத்திருப்பான்?**

- குறிப்புகள் -